# வெற்றிமணி


London
GERMANY

Vettimaniy

மணி 66 free Circulation ஆனி. June 2016


# Rathy

JEWELLERS LTD
London's Largest Selections
லண்டனில் முன்னணி நகைமாளிகை!
எப்பொழுதும் நியாயமான விலை
புத்தம் புது டிசைன்கள்



28 Ealing Rd
Wembley
HAO 4TL London
Tel: 02089033063

209 upper Tooting Road
Tooting SW17 7TG
0208682 2233


## புலம் பெயர் வாழ்வில் திருமணமாகாத
# பெண்களின் எதிர்காலம்

சந்திரவதனா

## உலகில் முதல் விமானத்தைப் பிரச்சாரத்திற்கு பயன்படுத்தியவர் ஹிட்லர்!



## உன்னை நீயே உருவாக்கு

சேவியர்





## ஊருக்குப் போவோம்

-மீனா


செல்வராஜா
கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்

எம்மிடம் தாலிக்கொடிகள்
செய்பவர்களுக்கு கூறைப்புடவைகள்
பட்டுப்புடவைகள் அனைத்தும்
50% விலைக்கழிவில்

162 B, Mitcham Road London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269

இந்த இடத்தில்
விளம்பரம் செய்ய
முந்துங்கள்!



Vai g 07788 195962 (U.K) Vettimaniy@hotmail.com


தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி




Tel.: 0201/236925

APIRAAMI ENTERPRISE
Pferdemarkt 9
45127 ESSEN






# கோப்பியில் கோபியர்க்கு

## அழகிய ஆபரணம்





காலையில் எழுந்தும் (Bed cofffe) கோப்பி. காலைக்கடன் முடித்து பல்துலக்கி, குளித்து... இதுவரை சுகாதாரம். இதன் பின்னே ஆம்பிப்பது அலங்காரம்.

ஆண்கள் சவரம் செய்து சிகைக்கு விதம் விதமான கிறீம் தடவி,செல்லும் இடத்திற்கேற்ப ஆடைகள் தெரிவுசெய்து அட்டகாசமாக ஆரம்பிக்க, பெண்கள் அதனைவிட ஒரு படிமேல் சென்று, ஆடை அணிகலன் என்று சொல்ல வேண்டியது இல்லை! அதைத்தானே தினம் தினம் வீட்டில் பார்கின்றோம்.நாமும் இரசிக்கின்றோம்.

இப்படி ஆடம்பரம் ஒரு கோப்பியுடன் ஆரம்பமாகும் பல வீடுகளில். அந்தக் கோப்பிக் கட்டையையே அணிகலன் ஆக்கும் திறன் வந்துவிட்டது.



**கறுப்பு வைரம் நமக்கும் எடுப்பாகத்தானே உள்ளது!**

முன்பு ஒரு முறை எழுதினேன் யேர்மனியில் கோப்பிக் கட்டையில் இருந்து கோப்பிக்கப் தயாரிப்பதாக. இப்போ அதே கோப்பிக் கட்டையில் இருந்து இங்கிலாந்து நாடு, பெண்களுக்கு தோடு, அட்டியல், வளையல், எனப் பல அட்டகாஷமான அணிகலன்களைத் தயாரிக்கின்றது. இது கறுப்புவைரம் போல் உள்ளது.

வெண்தளிர் மேனிக்கு கறுப்பு வைரம் அழகாக ஜொலிக்கின்றது. நமக்கு இந்த அணிகலன் தேவையா? எனக் கேட்கலாம்.



**மாதவி**

நம் பெண்கள் கறுப்பு வைரம் போன்று இயல்பாகவே ஜொலிப்பவர்கள் அல்லவா? இருந்தாலும் வைரத்தில் வைரம் பதித்தால் போல் இந்த அணிகலன் நம்மவர்க்கும் அழகு தரும்.

மேலே கோப்பிக்கடையில் இருந்து உருவானது, என்பதனை ஒரு கணம் மறந்து பாருங்கள்! அத்தனையும் கறுப்பு வைரமாக மின்னும். உலகில் வல்லவனுக்கு கழிவு என்று ஒன்றும் இல்லை.

அன்று நாம் ரின்பால் ரின்னில் கடைலைச் சுண்டு செய்யவில்லையா? பிட்டுக் கொத்தவில்லையா? நெஸ்ரோமேற் ரின்னில் மூக்குப்பேணி செய்யவில்லையா? சன்லைட்பெட்டியில், மேசை செய்யவில்லையா? பழைய துலாக்கயிற்றில் கடைகளில் சிகரட்பற்ற லைட்டர் (துலாக்கொடி எரிந்தபடியே தொங்கும்) துலாக்கொடியில் செய்யவில்லையா?

தேங்காய் சிரட்டையில்,கரண்டி செய்யவில்லையா? இப்படி எமது வல்லமைகள் பற்றி அடிக்கிக்கொண்டே போகலாம். ஆனால் பெற்றோலுக்குப் பதிலாக கோப்பிக்கட்டையில் இருந்து கார் ஓடும் என்று எவரும் கண்டுபிடிக்காவிட்டால் சரிதான்.

**வெற்றிமணி**
**முக்கிய அறிவித்தல்**

வெற்றிமணி அபிமானிகளே
அன்பான வேண்டுகோள்.

நிகழ்வின் நிழல்கள்
என்னும் பகுதி.
நமது மக்களின் கலை, கல்வி,
பண்பாட்டு நிகழ்வுகளின் பதிவுகளாக
நீண்டகாலமாக வரும் ஒரு பகுதி.
இப்பகுதியில் இடம் பெறும்
புகைப்படங்கள்
தெளிவானதாக இருக்க வேண்டும்.
தெளிவில்லாத எந்தப்படமும்,
முக்கிய நிகழ்வாக இருப்பினும்
பிரசுரிக்கப்பட மாட்டாது.
முக்கியமாக கைத்தொலைபேசியில்
எடுக்கும் படங்கள்
தவிர்க்கப்படவேண்டும்.
2 படங்கள் மட்டுமே அனுப்பலாம்.
தெரிவு செய்யும் பொறுப்பு
வெற்றிமணி நிர்வாகத்தைச்
சார்ந்தது.
மின் அஞ்சலில் மட்டுமே
ஒவ்வொரு மாதமும் 14 ம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்க
வேண்டும்.

e-mail: vettimaniy@hotmail.com


**வெற்றிமணி விளம்பரத் தொடர்புகளுக்கு** **யேர்மனி**

Tel: 02351/45 88 62
0163 199 2 333
e-mail: vettimaniy@hotmail.com


UK. Sanje:(0044) 07824 61 83 83
vai g (0044) 00 44 7788 195962





**வெற்றிமணி**

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
——————————கவிஞர்.வி.க
ஓசை 237



ஆரம்பம்:1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
*Chief Editor:*
**Dr.M.K.S.Sivakumaran B.F.A.**

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com
Company No: 8876276

**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Vettimaniy Ltd
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962

# உலகில் முதல் முதல் விமானத்தைப் பிரச்சாரத்திற்கு பயன்படுத்தியவர் ஹிட்லர்!









சட்டசபை தேர்தல் நெருங்கிவிட்ட நிலையில், தமிழக அரசியல் தலைவர்கள் அனல் பறக்கும் பிரச்சாரத்தை மேற்கொண்டனர். முதல்வர் ஜெயலலிதா, திமுக தலைவர் கருணாநிதி உள்ளிட்டோர் தேர்தல் பிரச்சாரத்தின்போது விமான பயணத்தையும் மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக, முதல்வர் ஜெயலலிதா 2011 முதல் தேர்தல் பிரச்சாரத்தின்போது அதிக அளவு வான்வழி போக்கு வரத்தை பயன்படுத்தி வருகிறார். இந்தியாவில் முதல் முதல் வான்வழி தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்து வைத்த பெருமை மறைந்த இந்தியபிரதமர் இந்திராகாந்தி அம்மையாரையே சாரும். தமிழ்நாட்டில் முதல்வர் ஜெயலலிதா. இது ஒருபுறம் கடும் விமர்சனத் திற்குள்ளாகி வரும் வேளையில், முதல்முறையாக தேர்தல் பிரச்சாரத்திற்கு உலகில் விமானத்தை பயன்படுத்திய தலைவர், ஜெர்மனியின் சர்வாதிகாரியாக இருந்த ஹிட்லர்தான். தேர்தல் பிரச்சாரத்திற்கு தனி விமானத்தை பயன்படுத்திய தலைவர் அவர். தேர்தல் பிரச்சாரத்திற்கு விமானத்தை பயன்படுத்தலாம் என்ற வழக்கத்திற்கு வித்திட்டவரும் இவர்தான். அது மட்டுமல்ல போர்காலத்தில் (தண்ணீர் இல்லாமல் அதாவது குளிருக்கு உறையும் என்பதனால்) ரேடியேற்றர் இல்லாத vox vagen கண்டுபிடிக்கச் சொல்லி கெடு கொடுத்தவரும் இந்த கிட்லர்தான். Highway மற்றும் தெருக்களில் மெதுவாகச் செல்லவேண்டும் என்பதற்கு போடப்பட்ட தம்பர் ( முதல் முதல் பேலின் நகரில்தான் இது போடப்பட்டது.) நாம் அறிய ஊரில் திருவிழாக்காலங்களில் தெருவில் இரு மருங்கிலும் தண்ணீர்பந்தல் அமைக்கப்படும். மக்கள் தெருவில் கண்டபடி கூடுவதால் அந்த இடத்தில் தெருவின் இரு புறத்திலிருந்தும் வரும் வாகனங்களும் வேகத்தைக் குறைக்க இந்த மண்பிட்டி அமைக்கப்படும்.

ஆம், 1932ம் ஆண்டு ஜெர்மனியில் நடந்த பொதுத்தேர்தலின்போது ஹிட்லர் பிரச்சாரத்திற்கு செல்வ தற்கு விமானத்தை பயன்படுத்தினார். அதுவரை அரசியல் தலைவர்கள் ரயிலில்தான் பயணித்து வந்தனர். இது அப் போது விமர்சனத்திற்குள்ளானது. ஆனால், அவர் கவலைப்படவில்லை.


ஹிட்லரின் முதல் தனி விமானம் பிரச்சாரத்தின்போது வாடகை விமானத்தை பயன்படுத்திய ஹிட்லர், ஜெர்மனியின் தலைவரான பிறகு 1933ம் ஆண்டு ஹிட்லர் தனது பயன்பாட்டுக்காக முதல் விமானத்தை வாங்கினார். D-2600 என்ற பதிவெண் கொண்ட ஜுங்கர்ஸ் ஜேயு 52.˙.3 எம் என்ற தனி விமானத்தை அவர் வாங்கினார்.

ஜெர்மனியை சேர்ந்த ஜுங்கர்ஸ் நிறுவனம் 1931ம் ஆண்டு முதல் 1952ம் ஆண்டு வரை இந்த விமானத்தை தயாரித்தது. பொது போக்குவரத்து மற்றும் ஜெர்மனியின் ராணு போக்குவரத்து பயன்பாட்டில் இருந்தன. நடுத்தர வகை குண்டு வீச்சு விமானமாகவும், ராணுவ சரக்கு போக்குவரத்திற்கும் பயன்படுத்தப்பட்டது. 1980 வரை பயன்பாட்டில் இருந்தது.

தொடர்ச்சி 08ம் பக்கம்...

உலகை வலம்வர
உற்றதுணை நாங்கள்!
Century Travels GmbH
website : www.centurytravels.de
கோடைகால விடுமுறை 2016
ab 699€
Colombo Direct Flight
11.07.2016-15.08.2016
18.07.2016-22.08.2016
30 Kg
Colombo
Guest House
3-4 Person
Pro Tage 39-59 €
Ram Nishanthan
Dip.T.T.Mgt-IATA/UFTAA Montreal
017621682149
இந்தியாவுக்கான விசா பெற்றுத் தரப்படும்
Sri lanka:
No-82
New Chetty street
Colombo 13
Tel: 011 23 22 838
Fax: 0231 5844665
email : info@centurytravels.de
Essen மாநகரில்
Steeler str 150
45139 Essen
0201 64 888 225
29€
Colombo airport Transfer 29€
Rheinische Strasse 29
44137 Dortmund.Germany
Tel: 0231 58 96 557 /0231 55 74 319

# மூவாயிரம் ஆண்டுகள் கடந்தும்




தலைவனே,

உன் இதழ்களுக்குள்
நீர்இறுக்கி வைத்திருக்கும்
முத்தத்தின் முத்துக்களை
என் இதழ்கள் மேல்
இறக்கி வைத்து விடுக.

உமது காதல்,
போதையின் படுக்கை,
அதுதிராட்சை இரசத்தின்
போதையைக் கடந்தது.

உமது பரிமள தைலம்
எல்லைகளை வெட்டி
எல்லா இடங்களிலும்
நிறைகிறது.

மென்மையின் மங்கையர்
உன்காதலுக்காய்
காத்திருக்கின்றனர்.

வந்து என்னைக்
கவர்ந்து செல்,
இன்பத்தின் அறைகளை
காதல் ஊற்றி
நிறைத்திடுவோம்.

எருசலேம் மங்கையரே,
நான்கருப்பு தான்.
ஆனாலும் என்னை
கேதாரின் கூடாரங்களோடும்

சாலமோனின்
எழில் திரைகளோடும்
ஒப்பிட்டு எழுதலாம்.

நான்
மங்கிய நிறம் தங்கிட
மங்கையே,
என் எழிலோ
எல்லையற்றது !

கதிரவன் கருணையின்றி
தன் கதிர்களை,
என் மேல் வீசினான்.
நான்நிறம் வறண்டு
கருப்பானேன்.

என் தமையர்
என்மேல் சினந்து,
தங்கள் திராட்சைத்
தோட்டங்களில்
காவலாளியாய் ஆக்கினர்.

என் தோட்டமோ
கவனிப்பாரின்றிக் கிடக்கிறது.

என் காதலனே,
நீர் எங்கே ஆடுகளை
மேய்க்கிறீர்.சொல்லும்.
இதோ நான்
வழிதவறிய ஆடாய்
கூடாரம் தேடி கவலைப்
பயணம் தொடர்கிறேனே.

என் சுவாசத்தின் சூட்சுமமே,
மந்தையின்
கால்சுவடுகளை தொடர்ந்து
இடையர்களின்
கூடாரங்களின் அருகே
உன் ஆட்டுக் குட்டிகளை
மேயவிடு.

என் பிரியமே,
நீ,
பாரவோன் மன்னனின்
தேர்ப்படைகளுக்கு நடுவே
உற்சாகமாய் உலவும்
வெண்புரவி.

குழையணிகளால்
உன் கன்னங்களும்,
மணிச்சரங்களாய் கழுத்தும்
எழில்களை ஏராளமாய்
இழுத்து வைத்துள்ளன.

உனக்காய்,
பொன் வளையல்கள் செய்து
அதிலே
வெள்ளி வளையங்கள்
துள்ளி விளையாடச்
செய்வேன்.

என் காதலர்
வெள்ளைப் போளமாய்
என்
மார்பில் தங்கிடுவார்.

என் காதலர் எனக்கு
மருதோன்றி மலர்கொத்து.
இளைய தளிர்களால்
இதயம் துளிர்க்கவைக்கும்
எங்கேதித் தோட்ட
மருதோன்றி அவர்.

வென்புறாக்களாய்
சிறகடிக்கின்றன
உனது கண்கள்.

நம்
வீட்டின் விட்டங்கள்
கேதுரு மரங்கள்,
மச்சு தேவதாரு கிளைகள்.

சரோன் சமவெளிக்
காட்டு மலர் நான்.
பள்ளத்தாக்கின்
லீலிமலர்.

முட்களின் கூட்டத்தில்
மலர்ந்து கிடக்கும்
லீலி மலராய்
என் காதலன்
இதோ
மங்கையர் நடுவே
மலர்கிறான்.

அவர் நிழலில் அமர்ந்து
கனிகள் சுவைப்பது
எத்தனை இனிமை !

அவர்
என்னைப் பார்த்த
பார்வையில்

காதல் கலந்தே
இருந்தது.

ஆரோக்கிய உணவளித்து
என்னைத் தேற்றுங்கள்
நான் காதல் நோயால்
பலவீனமாகிப் போனேன்.

இடது கையின் இடையே
எனைத் தாங்கி,
வலக் கரத்தின் விரலால்
எனை தழுவிக் கொள்வார்
அவர்.

எருசலேம் மங்கையரே
கேளுங்கள்.
காதலை தட்டி எழுப்பாதீர்கள்.
அது தானே விரும்பி
விழிக்கும் வரை
அதன்
தூக்கத்தைக் கலைக்காதீர்கள்.

என் காதலர் சொல்கிறார்.

வா அன்பே,
இதோ
கார்காலம் கடந்து விட்டது.
மழை ஓய்ந்த நிலம்
மெல்லிய
ஈரக் காற்றை விரித்து
நிற்கிறது.
இலைகளின் இடையே
மெல்லியப் பூக்கள்
மஞ்சம் விட்டு
புரண்டு படுக்கின்றன.

புறாக்களின் மெல்லிய
ஒலி,இதோ காதுகளை திறந்து
உள்ளே நுழைகிறது.

அத்திப் பழங்கள்
கனிந்து விட்டன,
திராட்சை மலர்கள்
மணக்கின்றன.
வா விரந்தெழு அன்பே.

குன்றின் வெடிப்புகளின்
குடியிருக்கும் என்
வெள்ளைப் புறாவே,
உன் முகத்தை காட்டி விடு.

மெல்ல மெல்ல
உன் குரலை எழுப்பு,
உன் குரலின் இனிமையில்
நான்
என்னை மறக்க வேண்டும்.

என் காதலர்
எனக்குரியவர்.

இந்த பகல்
இரவை உடுத்தும் முன்
வந்து
என்னை நிரப்பிடு காதலனே.
கலை மான் குட்டியாய்
இரவில் திரும்பி வா.

நன்றி:சேவியர்




( கி.மு 971 க்கும் 931 க்கும் இடைப்பட்ட காலத்தில் எபிரேய மொழியில் எழுதப்பட்ட இந்த கவிதைகள் இன்றும் வியப்பூட்டுகின்றன )
உன்னத சங்கீதம் (சுமார் 3000 வருடங்களுக்கு முந்தைய கவிதை)




## லூர்ட்ஸ் மாதா – போத்துக்கல் பார்த்திமா

july, Aug , மாதங்களில்
எம்மக்களின்
வேண்டுகோளுக்கிணங்க
லூர்ட்ஸ் மாதா கோவில்
மற்றும்
போத்துக்கல் பாத்திமாகோவில்
இவற்றிற்கு பஸ்மூலம் செல்ல
ஒழுங்கு செய்துள்ளோம்.

**புனிதப்பயணம்**

**போத்துக்கல்–(பார்த்திமா )**

**லூர்ட்ஸ் மாதா கோவில்**

உணவு,தேனீர், கோப்பி, குளிர் பானங்கள், தங்குமிட வசதிகள் (Room) பஸ் கட்டணம் அனைத்தும் உட்பட ஒரு வருக்கு 200 யூரோ மட்டுமே! பிரயாணம் செய்ய முன்கூட்டியே பதிவு செய்யவும்.

K.முருகா : 02972 7754
Handy: 0175 850 14 89




# யாழ்ப்பாணப் பண்பாடு
# மறந்தவையும் மறைந்தவையும்

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா



காரைநகர்ச் சோறும் கடுகடுத்த பச்சடியும்
ஊரவருக் கன்றி உவப்பில்லை - சீர்பெருகு
தங்கோடைச் சைவன் சமைத்த கறிசாதம்
எங்கேபோய்க் காண்பேன் இனி

என்று கல்லடி வேலுப்பிள்ளை காரைநகர்ச் சாப்பாட்டை விதந்து பாடியதை இங்கே சுட்டிக்காட்டலாம். பல்வேறு வகையான கறிவகைகளைப் பாகம் பண்ணும் முறையிலே பிரதேசத்துக்குள்ளேயே இடத்துக்கிடம் வேறுபாடு உண்டு. மகாகவி உருத்திரமூர்த்தியின் கவிதை வரி ஒன்று பின்வருமாறு:



அவள் கைபட்டால் வெறும் கத்தபிக்காயும்
சுறாக்கறி போலிருக்கும்
நெய் விட்டாள் பருப்போடெனில்
ஆம் அதன் நேர்த்தி சொல்லிட
வார்த்தைகள் வேண்டுமோ

இவ்வாறு சமயற்கலைச் சிறப்புப் பற்றிய செய்திகளும் நமது இலக்கியங்களிலே உண்டு.

### சிறுதானிய உணவுகள்

பனம் பண்டம் போலவே சாமை, தினை, வரகு, குரக்கன், முதலானவற்றின் பயன் பாடும் மிகமிக அருகி விட்டது. இவற்றைப் பயிரிடுவதும் இப்போது குறைந்து விட்டது. 19 ஆம் நூற்றாண்டில் அரிசிப் பயன் பாட்டிலும் சற்று அதிகமாகவே முற்குறிப்பிட்ட சிறுதானிய வகைகள் பயன்படுத்தப்பட்டன என அறிய முடிகின்றது.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திலே நிலவுடைமையாளர்களுக்கும் வசதி படைத்த சமூக மேலாதிக்கம் உடையவர்களுக்குமே அரிசி போதியளவு கிடைத்தது. மற்றவர்கள் பெரும்பாலும் சிறுதானிய வகைகளையும் கிழங்கு வகைகளையுமே தமது நாளாந்த உணவாகப் பயன்படுத்தினர் எனக் கூறப்படுகின்றது.

அரிசி முதலானவை வெளியிடங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட போதும் ஏழைகள் அவற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடிய கொள்வனவு சக்கியுடையவர்களாக இருக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. கோதுமை மாவின் (கூப்பன்மா) வருகையும் பயன்பாடும் முற்குறிப்பிட்ட உணவுப் பழக்கங்கள் அருகிப் போகக் காரணமாயின. கோதுமை மாவின் பயன்பாடு பற்றிய நாட்டுப் பாடல்களும் அரைவாய்மொழிப் பாடல்களும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலே வழங்கி வந்தமையும் குறிப்பிடத்தக்கது. எமது பண்பாட்டுப் பாரம்பரியத்திலே இணைந்து போயிருந்த உணவு வகைகள் பல இன்று மறைந்து முதியவர்களின் நினைவுகளில் மட்டுமே நிலைத் திருக்கின்றன.

### மரக்கறி உணவுகள்

மரக்கறியை “ஆருதக் கறி” என வழங்கும் வழக்காறே இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை வழக்கில் இருந்தது. யாழ்ப்பாணத்திலே சில சாதியினர் பரம்பரை பரம்பரையாகத் தாவர போசனம் உண்பவர்களாகவே இருந்தனர். என்பதும் குறிப்பிடத்தக்கது. ஒரு காலத்தில் (குறிப்பாக மழை காலத்தில்) இப்பிரதேச மக்கள் வெள்வேறு வகையான பச்சிலைகளைப் பாகம் பண்ணி உண்டனர். முருங்கை இலை, முசுட்டை இலை, முல்லை இலை (இதில் இரண்டு வகை உண்டு) அகத்தி இலை, குறிஞ்சா இலை, சண்டி இலை முதலான பலவற்றைக் குறிப்பிடலாம். இவற்றிலே பலவற்றை இன்றைய யாழ்ப்பாணம் மறந்து விட்டது. அவை பற்றி விரிவாக நோக்குவது சமயற்கலை ஆய்வாளர்களின் பணியாகும்.

இன்று சம்பல் அழைக்கப்படுவதைப் பச்சிடி - பச்சடி என்றே நம்முன்னோர் அழைத்தனர். பச்சையாக இடித்து எடுத்துப் பயன் படுத்துவது “பச்சடி” ஆயிற்று. பச்சடியிலும் பலவகை இருந்தது.

### மீன் இறைச்சி உணவுகள்

யாழ்ப்பாணச் சமூகத்தவரின் உணவு வகைகளிலே மீன் இறைச்சிப் பயன்பாடு குறிப்பிடத்தக்க அளவுக்கு இருந்திருக்கின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கடல் சூழ்ந்திருப்பதாற் போதியளவு மீன் வளம் இங்குள்ள மக்களுக்குக் கிடைத்தது. யாழ்ப்பாணப் பிரதேசத்தின் சில பகுதிகளில் இன்றும் “கறி” என்ற சொல் மீனைக் குறிக்கப் பயன் படுவதையும் அவதானிக்க முடிகிறது.(உதாரணம்:கறிக்கடை, கறிக்காரி, கறிக்காரன்). மரக்கறி, மாமிசக்கறி என்ற பாகுபாடு இன்றும் வழக்கில் உள்ளது.

19ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்துச் சைவ மறுமலர்ச்சி இயக்கத்தினால் கவரப்பட்ட பலர் மாமிச போசனத்தைத் தவிர்த்தனர். இதனால் இவர்கள் சமூக மேனிலையாக்க அந்தஸ்த்தினைப் பேணிக் கொள்ளவும் முயன்றனர். இந்த இடத்திலே டாக்டர் கிறீன் குறிப்பிடும் பின்வரும் கருத்தினைச் சுட்டிக்காட்டுவது எமது பிரதேச மக்களின் உணவுப் பழக்கவழக்கத்தின் பரிமாணங்களை அறிய உதவும்.

“யாழ்ப்பாணச்சமூகத்திற் கௌரவமானவர்கள் கூட வயல் எலிகளையும் (அகிழான் என்பர்), வௌவால், உடும்பு முதலியவற்றையும் உண்கிறார்கள். (some of the respectable people here eat field rats as well bats and lizards)"

சமூக மேலாண்மை உடைய உயர் சாதிக்காரர்களுக்கு அவர்களது அடிமை குடிமைகள் இவ்வகையான இறைச்சிகளைக் கொண்டுவந்து கொடுத்திருப்பர் எனக் கருதலாம். காலப்போக்கில் அந்தஸ்த்துப் பேணுகை காரணமாக இத்தகைய உணவு வகைகளை மேனிலைச் சாதியினர் தவிர்த்திருப்பர். மிக அண்மைக் காலம் வரை அடிநிலை மக்கள் மத்தியிலே வயல் எலி முதலானவற்றை உண்ணும் பழக்கம் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மாமிச கறிகளிலே மீன் தீயல் எனப்படும் ஒருவகைப் பாகமுறையும் உண்டு. தீயல் என்றும் தீச்சகறி என்றும் அழைக்கும் வழக்காறு இன்றும் உண்டு. இந்த இடத்திலே கவிஞர் செல்லையாவின் கவிதை ஒன்றைச் சுட்டிக்காட்டலாம்.



காய்ச்சுச் சாராயம் கடை விஸ்க்கி காசுக்கேன்
தீச்சகறிச் சோற்றுத் தீனியுடன் -ஆச்சியின்றை
செவ்விளனிப் பிள்ளையிலை சின்னையன் சீவின கள்
இவ்வளவும் போதும் எனக்கு





Lakshmi Jewellery &Silks
தரமான தங்க நகைகள்
மற்றும்
பட்டுப்புடவைகள் பாட்டிசாறிகள் இன்னும் பஞ்சாபிகள்
அனைத்தும் கிடைக்கும்
பசுமையான மரக்கறிவகைகளும்
கடலுணவுப்பொருட்களும்
இவற்றுடன் பலசரக்குப் பொருட்களையும்
எம்மிடம்
மலிவாகப்பெற்று பயன் பெறுங்கள்

Asia super markt





Tel:0521 4283 510
தொலைபேசி: Ruban 0179 72 35 729




# யாழ்ப்பாணம்
# என்னை காதலிக்காத காதலி

யூட் பிரகாஷ் அவுஸ்திரேலியா

நாற்பது சொச்ச வருட வாழ்க்கையில் மிகக் குறைந்தளவு வருடங்களே யாழ்ப்பாணத்தில் வாழ்ந்திருந்தாலும், யாழ்ப்பாணத்தில் கொண்ட காதல், கொழும்பிலோ மெல்பேர்ணிலோ வரவில்லை. யாழ்ப்பாணத்தை நான் அன்றும் காதலித்தேன், இன்றும் காதலிக்கிறேன். யாழ்ப்பாணம் மட்டும் என் காதலை என்றும் ஏற்றதில்லை, ஆனாலும் ஒரு தலை காதலாக என் காதல் தொடர்கிறது. அவள் என் காதலை ஏற்க விடாப்பிடியாக மறுக்க மறுக்க, யாழ்ப்பாணத்தில் எனக்கிருக்கும் காதலும் வீறாப்பாய் தொடர்கிறது.

டுபாயிலிருந்து கொழும்புக்கு விமானம் ஏற ஆயத்தமாக ”யாழ்ப்பாணம் போகப் போகிறேன்” என்று மனம் உற்சாகமாக, கண்கள் பனித்தன. சென்னை தாண்டி, இலங்கைத் தீவிற்கு மேல் விமானம் பறக்க, ஒரு சிறுவனை போல் யன்னலில் முகம் புதைத்து யாழ்ப்பாணத்தை தேடுகிறேன். மறைத்த முகில் அகல, நாங்கள் கோலோட்சிய நீல நிற ஆழக்கடலில், யாழ்ப்பாணத்தை தேடுகிறேன். பார்வைக்குள் வர அவள் மறுக்கிறாள். விமானத்தின் வலப் பக்கத்தில் நான், விமானத்தின் இடப் பக்கத்தில் யாழ்ப்பாணம், தொடர்ந்தும் என்னை யாழ்ப்பாணம் தவிக்க வைத்தது.

சிவராத்திரி விடுமுறை தினத்தில், கட்டுநாயக்காவில் விமானம் தரையிறங்க, கட்டுநாயக்கா மண்ணில் 2001ல் வீரசரிதம் படைத்த மறவர்கள் ஒவ்வொரு தடவையும், கட்டுநாயக்காவில் விமானம் தரையிறங்கும் போதும், அந்த மறவர்கள் நினைவில் நிழலாடுவார்கள். விமானத்திலிருந்து பரபரப்பாக இறங்குகிறேன்.

விமான நிலையத்தில் முந்தைய தடவைகளில் நம்மை பயமுறுத்திய மகிந்தவின் மாபெரும் படம் இருந்த இடத்தில் குட்டியாய் My3 சிரித்தார். அந்த இடத்தில் ஒருக்கா நின்று, முஷ்டி மடக்கி கையை முன்னும் இழுத்து "yes we did it" என்று ஆட்டம் போட்டது மனது. பம்மடிக்க போன இடத்தில், என்னுடைய சிங்களத்தை பரிசோக்க பாத்ரூமில் ஒருத்தன் தனியா மாட்டினான்.
”அத நிவாடு தவசத, பொஸ்” (இன்று விடுமுறை நாளா ?) சிங்களத்தில் கன்னியுரையாற்றினேன்.
”ஓவ் (ஓம்)” துடைப்பத்தை வைத்துவிட்டு அவன் பதிலளித்தான்.
”மொகடத நிவாடு” (எதுக்கு விடுமுறை). வாவ்...சிங்களம் புகுந்து விளையாட, நானே ஆச்சரியப்பட்டு கொண்டு, மல்லியை பரிசோதித்தேன்.
தலையை சொரிந்து கொண்டே ”மொகத..மெஹே... மே... அற.. மங் தன்னஹா” (எனக்கு தெரியாது). சிவராத்திரிக்கு விடுதலையென்று தெரியாத குடிமகன் இருக்கும் வரை நல்லிணக்கம் என்பது ஒரு நீண்ட தூரபயணமாய் தானிருக்கும்.குடிவரவு பகுதியில் நாவல் கலர் சீலை அணிந்த பெண் அதிகாரிகள் இறுக்கமான முகத்துடன் பாஸ்போர்ட்டை வாங்கினார்கள். 2002ல் திமிராய் சொன்ன ”வணக்கம்” நினைவில் வர ”ஆயு...” வரமறுக்க, "Good morning" .

**”ஓயா டுவள் சிட்டிசன் த (நீங்கள் dual citizen ஆ)...**
**நாவல் சேலை பெண் அதிகாரி வினா**
**தொடுத்தாள். ஒஸ்ரேலியன் பாஸ்போர்ட், பார்த்தும் இங்கிலீஷ் வர**
**மறந்ததோ ? மறுத்ததோ ?**

**”நஹா (இல்லை)”,**
**பதில் பக்கென்று வந்தது, நாங்களும்**
**நாகவிகாரைக்கு போகாமலே நல்லிணக்க**
**சமிக்ஞை காட்டினோம்.**
**”என சறை எனகொட கண்ட”**
**(அடுத்த முறை வரும் போது எடுங்கோ)**
**ஆஹா.. சாணக்கியமாய் கவித்திடுவீங்களோ ?**
**இது தான் நல்லாட்சியோ ?**

கொழும்பிலிருந்து மழை தூறி ஆசிர்வதிக்க, பரி யோவான் நண்பர்களுடன் யாழ்ப்பாணம் நோக்கிய பயணம் தொடங்கியது. காதலியை காணப்போகும் படபடப்பு தொற்றிக்கொள்ள, சூரியன் FMல் ”என்னவென்று சொல்லுவது வஞ்சியவள் பேரழகை” பாட்டு ஒலித்தது. அநுராதபுரத்தில் நிற்பாட்டி இஞ்சி போட்ட ப்ளேன் டீ குடித்துவிட்டு, மதவாச்சி தாண்டி, வவுனியா எல்லைக்கோடு கடக்க, மண் மணம் மணக்க தொடங்கியது.

**யாழ்ப்பாணம்..**

தாண்டிக்குளத்திலும் ஓமந்தையிலும் பஸ் நிற்காமல் போக, இல்லாமல் போன ஒன்றை ஏனோ மனம் தேடியது. புளியங்குளம் தாண்ட விடிய மூன்று மணியாகிவிட்டது. நித்திரை வர மறுக்க, பஸ்ஸின் முன்படியில் இருந்து, ஓயாமல் அலையடித்த ஏ9 வீதியை பார்த்துக்கொண்டே பயணம் தொடர்ந்தது.

புளியங்குளம்...கனகராயன்குளம்..மாங்குளம்.

”முருகண்டி நவத்தண்ட” ( முருகண்டியில் நிற்பாட்டுங்கோ) ஓட்டுனரிற்கு கட்டளை பறந்தது. வன்னி காத்து பட்டதும் அண்ணருக்கு வீரம் வந்திட்டுதோ ? முருகண்டியில் கற்பூரம் ஏத்தி, தேங்காய் உடைத்து, டீ குடித்து கொண்டே ஒரு உதயன் பேப்பரை வாங்கி நாலு பேர் சுத்தி நின்று வாசிக்க.. அன்று நாம் வாழ்ந்த வாழ்க்கை மீண்டது போலிருந்தது.
கிளிநொச்சி நகர் தாண்ட இதயம் கனத்தது. இதில தான் அது இருந்தது அதில் தான் இது இருந்தது என்று நித்திரையால் எழும்பின பெடியள் கதைத்தது காதில் விழுந்தது. பரந்தன் தாண்டி ஆனையிறவு நெருங்க, இராணுவத்தின் வெற்றி சின்னத்தை பற்றி ட்ரைவர் தனது கோலயாவிற்கு பெருமையாக பீத்தி என்னை வெறுப்பேத்தினான்.

இத்தாவில் கடந்து முகமாலை தாண்டி தென்மராட்சியில் பஸ் பயணிக்க தொடங்க, நினைவுகள் இழப்புகள் தோல்விகள் என மனம் அசைபோட்டது. சாவகச்சேரி, கைதடி, நாவற்குளி பாலம் கடந்து போக, காதலியை காணப்போவதை நினைத்து இதயத்துடிப்பு அதிகரிக்க ஆரம்பித்தது.

அதோ அவள்.. கண்டுவிட்டேன்..
அதோ யாழ்ப்பாணம்.. கண்டுவிட்டேன்..

காலை சூரிய ஒளியில் அவளை காண கண்கோடி வேண்டுமே. கட்டிப்பிடித்து முத்தம் கொடுக்க விடமாட்டாள், அவள் காதலிக்கவே இல்லை, இதுக்குள் முத்தமும் மண்ணாங்கட்டியும். சரி தொட்டு தான் பார்க்கலாம் என்றால், கன்னத்தில் அறை விழும் என்று பயம். எட்ட நின்றே அவளை தரிசிப்பேன், எட்ட நின்றே அவளை காதலிப்பேன்.
ஆஹா.... அவள் சிரிக்கிறாள்.. நான் சிலிர்க்கிறேன். அவள் பார்வையால் என்னை வரவேற்க நான் அவள் பாதம் தொட்ட மண்ணை கையில் எடுத்து நெற்றியில் ஒற்றி கொண்டேன்.

யாழ்ப்பாணம்..
என்றென்றும் என் காதலி
என்னை காதலிக்காத காதலி
என்றாவது என்னை விரும்புவாள்
அதுவரை..காத்திருப்பேன்..


**Nandy's Catering & Partyservice**

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள்
மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு
உதவ ஆயத்தமாக உள்ளளோம்

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

www.Nandys.de
e.mail:info@nandys.de



# இடை, இடையே, மனதில் வந்து போகின்றாள்

**-சுருதி -**

ஒரு காலை நேரம். ரெலிபோன் அடித்தது. எடுத்தேன்.
மறுமுனையில் அந்தப்பெண் விக்கி விக்கி அழுதாள். பேச்சு வரவில்லை. எதையும் சரிவரச் சொன்னால்தானே அவர் யார் என்ன சொல்கின்றார் என்பதை நான் புரிந்து கொள்ளலாம். இருப்பினும் அவரது குரலில் இருந்து அவர் தமிழினி என்பதை அடையாளம் கண்டுகொண்டேன்.
தமிழினி நண்பன் ஜெயரதனின் மனைவி.
“உங்கடை வை.்.ப் இருக்கிறாவா? அவரிடம் கொடுங்கள்” ஒருவாறு தானே தன்னைத் தேற்றிக் கொண்டு சொன்னாள் தமிழினி.
நான் மனைவியிடம் ரெலிபோனைக் கொடுத்துவிட்டு, அவளருகில் விடுப்புப் பார்க்க நின்றேன்.
மனைவி 'ஆ... ஆ...' என்று வாய் பிளந்தாரே தவிர ஒன்றும் கதைக்க வில்லை. குரலில் ஒரு பதட்டம் தெரிந்தது. நான் ஒட்டுக் கேட்பதற்காக மனைவியின் காதருகே சென்றேன்.
“ஒரு நிமிஷம் பொறுங்கோ. போங்கோ அங்காலை” என்னைத் தோட்டப்பக் கமாகக் கலைத்தாள் மனைவி. சரி... பிறகு சொல்லத்தானே வேண்டும். நான் அங்கிருந்தபடியே கண்ணாடிக்குள்ளால் மனைவியைப் பார்த்தேன். மனைவியின் முகம் பேயறைந்தது போல இறுகிக் கிடந்தது. இன்னும் கொஞ்ச நேரம் கதைத்தால் அவளும் அழுதுவிடுவாள் போல இருந்தது.
ஜெயரதன் தமிழினிக்குத் தெரியாமல், சிறீலங்காவிற்கு யாரோ ஒரு பெண்ணுக்கு காசு அனுப்புகின்றான். ஒரு தடவையல்ல. பல தடவைகள். விஷயத்தைப் போட்டுடைத்தாள் மனைவி.
“இது எப்பிடி தமிழினிக்குத் தெரியும்?”
“ஜெயரதன் வேலைக்குப் போனாப் பிறகு அவருடைய வைப்புச் செப்புகளை தமிழினி கிழறிப் பார்த்திருக்கின்றாள். கள்ளன் பிடிபட்டுக் கொண்டான்” என்றாள் மனைவி.

ஜெயரதன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் எனக்கு அடுத்த வகுப்பில் படித்தான். படித்தான் என்றால் இருபது வருடங்களுக்கு முன்னர் என்று கொள்க. அவுஸ்திரேலியாவிற்கு வந்து முதன் முதலில் அவனை நான் சந்தித்தபோது, அவனையும் அவனது இரண்டு பிள்ளைகளையும் பார்ப்பதை விடுத்து அவன் மனைவியைத்தான் பார்த்தேன். தமிழினி 'அவள்' அல்ல என்பதைக் கண்டு கொண்டேன். அவள் அழகி, மெல்லிய உடல், உயரமான பெண், வெள்ளை நிறம். தமிழினி இவையெல்லாவற்றிற்கும் நேர்மாறு.



அக்பர் ஹோல் ஆண்களுக்கான விடுதி என்பதும், பொறியியல் பீடத்திற்கு மிக அண்மையாக உள்ளது என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.. ஆனால் அக்பர் ஹோலில் ஒரு போதும் பெண்கள் வாடை வீசியது கிடையாது. பொறியியல் பீடத்தில் படிக்கும் பெண்களில் மறந்தும் ஒருவர்கூட அங்கு வந்தது கிடையாது. ஹோல் கன்ரீன் நடத்துபவர்கள்கூட ஆண்கள்தான். அக்பர்ஹோல் ஆண்கள் சாம்ராஜ்ஜியம்.

ஜெயரதன் பெண் ஒருத்திக்கு காசு அனுப்புகின்றான், அதுவும் அவுஸ்திரேலியாவிற்கு வந்த நாளில் இருந்து அனுப்பி வருகின்றான் என்றபோது எனக்கு 'அவள்' தான் ஞாபகத்திற்கு வந்தாள்.
காலையில் தினமும் பேப்பர் போட்டு, மாலையில் 'பிஷா' டிலிவரி செய்து கஸ்டமாகப் பணம் சம்பாதித்தபோதும், அந்தப் பெண்ணுக்கு பணம் அனுப்பியிருக்கின்றானே என்பதுதான் தமிழினியின் பிரச்சினை.
யார் அந்தப் பெண்?
இது நடந்து இருபது வருடங்களுக்கும் மேலாகிவிட்டது.

ஒரு நாள் சனிக்கிழமை காலை பத்து மணி இருக்கும். அக்பர்ஹோல் வாசலருகே ஒரு இளம்பெண் மயிந்திக்கொண்டு நின்றாள். ஹோலை விட்டு வெளியே போவோர் வருவோரிடம், ஜெயரதனைச் சந்திக்க விரும்புவதாகச் சொல்லியபடி நின்றாள். பார்த்த மாத்திரத்தில் கொள்ளை அழகு கொண்ட அந்த இளவயதுப் பெண் தன்னந்தனியனாக நின்றது பார்க்கப் பரிதாபமாக இருந்தது. ஏதோ ஒரு அவலம் அவளை இங்கே கொண்டுவந்து விட்டிருக்க வேஎண்டும்.
செய்தி ஜெயரதனைச் சென்றடைவதற்குள் அக்பர்ஹோல் எங்கும் பரவி வார்டனையும் எங்களையும் எட்டியது.

எங்களில் சிலர் புட்டுக்குழலை அவசர அவசரமாக அணிந்து கொண்டோம்.
”எங்கையடாப்பா காலமையே கிழம்பிட்டியல்?”
”கண்டிக்குப் போட்டு வாறம்.”
கண்டிக்குப் போவது போல சொல்லிக் கொண்டு, பஸ் ஸ்ராண்டிற்குப் போவதும் பின்னர் மீண்டும் அறைக்குத் திருப்புவதுமாக நடை பழகினோம்.

”சே! பஸ் போட்டுதப்பா... றூமுக்குப் போட்டு கொஞ்ச நேரத்திலை திரும்பி வருவம்.” அந்தப் பெண் யார் என்று அறிவதுதான் எமது குறிக்கோள். கடைக்கண்ணால் அவளைப் பார்த்தோம். மூக்கும் முழியுமாக அழகாகவிருந்த அவளை வார்டன் துருவிக் கொண்டிருந்தார். ஜெயரதன் ரொயிலற்றுக்குள் ஓடி ஒளித்துக் கொண்டதாகச் சொன்னார்கள்.
பார்க்கப் பார்க்க பார்க்க வேண்டும் போன்றதொரு அழகு அவள். நாங்கள் மூன்றாவது றவுண்டாக - ஐந்து நிமிடங்கள் பஸ் ஸ்ராண்டில் இருந்துவிட்டு, மீண்டும் அறைக்குத் திரும்பும்போது ஜெயரதன் அங்கே இருந்தான்.

அவளுக்கு நேர் எதிராகக் கதிரையைப் போட்டுக் கொண்டு அவளை விழுங்கிவிடுமாப் போல நெருங்கி உட்கார்ந்திருந்தான் ஜெயரதன். அவள் அவனது கையைப் பிடித்து ஏதோ கெஞ்சிக் கொண்டிருந்தாள். அவளது முகம் அழுது வீங்கியிருந்தது. கண்களில் இருந்து கண்ணீர் கோடு போட்டு இறங்கி காய்ந்திருந்தது. ஜெயரதன் அவளைச் சமாதானம் செய்து கொண்டிருந்தான்.

தொடர்ச்சி 8ம் பக்கம்





7ம் பக்கத் தொடர்ச்சி

# இடை, இடையே,..

"மச்சான் இது வேற கேஸ். உவன் தொழிலுக்குப் போய் மாட்டிக் கொண்டு விட்டான். காசைக் குடுக்காமல் ஏமாத்திப் போட்டான். அதுதான் அவள் ஹோல் வரைக்கும் வந்திருக்கிறாள்" என்றான் ஒருவன். அந்தக் கதை கை கால் முளைச்சு எல்லா இடமும் பரவியது.

மதியம் ஒரு மணி கடந்த வேளையில், நிஜமாகவே கண்டி செல்லப் புறப்பட்டபோது விருந்தாளிகள் பதிவிடும் கொப்பியை எட்டிப் பார்த்தோம். அவளது பெயர் 'சாந்தி' என்று பதிவாகி இருந்தது.
கொஞ்ச நாட்களாக ஜெயரதன் றூமிற்குள் அடைபட்டுக் கிடந்தான். படிப்பு ஓடவில்லை. தனது சிறிய ரேப் றக்கோடரில் 'அமைதிக்குப் பேர்தான் சாந்தி' என்ற பாடலைப் போட்டு பலமுறை லயித்திருந்தான். விரிவுரைகள் சிலவற்றிற்கும் மட்டம் போட்டான். இரண்டாம் வருடத்தில் இரண்டு பாடங்கள் கோட்டை விட்டான்.

'சாந்தி' என்று அவனைப் பட்டம் தெளிக்கும்போது சும்மா சிரித்துவிட்டுச் செல்வான். விருப்பம் இல்லாமல் சிரிப்பு வராது என்பது எங்கள் தத்துவம்.

நாளாக எல்லாம் மறக்கப்பட்டது. எல்லாரும் பிரிந்து வேறு திசைகள் சென்று விட்டோம்.

சிறிது நேரத்தில் திரும்பவும் தமிழினி ரெலிபோன் செய்தாள். அவளுடன் கதைத்த மனைவி, ரெலிபோனைப் பொத்தியபடி"உங்களுக்கு சாந்தி வேந்தன் என்ற பெண்ணைத் தெரியுமா?" என்று கேட்டாள்.
சாந்தி வேந்தன்.
சாந்தி...
சாந்தியைத் தெரியும். வேந்தனைத் தெரியாதே! எனக்குத் தெரியாது என்று பொய் சொல்லிவிட்டேன். "அக்கா... பிரச்சினையைப் பெரிசுபடுத் தாதையுங்கோ. இதை வேறை ஒருத்தருக்கும் சொல்லியும் போடாதையுங்கோ. எல்லாத்தையும் ஆறப் போடுங்கோ. ஆறுதலா மனம்விட்டு ஜெயரதனோடை கதையுங்கோ. எல்லாம் சரிவரும்" மனைவி உபதேசம் செய்தாள்.

சிலவாரங்கள் கழித்து மீண்டும் ஒருநாள் தமிழினி ரெலிபோன் செய்தாள். அவள் குரலில் மகிழ்ச்சி பொங்கியது.
"சாந்தி எண்டது ஜெயரதனுடைய நண்பன் வேந்தனின் மனைவியாம். வேந்தன் ஆமி சுட்டுச் செத்துப் போனானாம். பாவம் சாந்தி கஸ்டப்படு கின்றாள் எண்டு சொல்லிக் காசு அனுப்புகிறவராம். நான் தான் ஏதோ தப்பாப் புரிஞ்சு கொண்டிட்டன்" தமிழினி சொல்லிக் கொண்டே போனாள்.

"தமிழினியே இப்படிச் சொல்லும் போது, நான் ஏன் இதுக்குள் போய் தலை குடுத்து முட்டிக்குவான்"

இடை இடையே மனதில் அவள் வந்து போகும் தருணமெல்லாம், அவளிற்கு காசு அனுப்புகின்றான் ஜெயரதன்

**தேர்தல்பிரசாரத்திற்கு முதல் விமானத்தை** 3ம் பக்கத் தொடர்ச்சி

விமானத்தின் செல்ல பெயர் முதலாம் உலகப்போரில் ஜெர்மனிக்கு வான்வழி வெற்றிகளை குவித்து தந்த மேக்ஸ் இம்மெல்மான்ஜபடத்தில் இருப்பவர்ஸ என்ற பைலட்டின் பெயரையே தனது தனி விமானத்திற்கு சூட்டினார். இந்த விமானத்தில் பிராட் அண்ட் ஒயிட்னி நிறுவனத்தின் உரிமத்துடன் தயாரிக்கப்பட்ட பிஎம்டபிள்யூ 132 எஞ்சின்கள் பொருத்தப்பட்டு இருந்தன.

விசேஷடேபிள் ஹிட்லரின் தனி விமானத்தில் அவரது இருக்கையின் வலது புறத்தில் ஒரு சிறிய டேபிளும் இருந்தது. அதில் விமானத்தின் வேகத்தை காட்டும் ஸ்பீடோமீட்டர், கடிகாரம், விமானம் எவ்வளவு உயரத்தில் பறக்கிறது என்பதை காட்டும் அல்டிமீட்டர் ஆகிய கருவிகள் இருந்தன.









19 June 1897 17 February 1993

பைலட் லூ.·.ப்தான்ஸா விமான நிறுவனத்தில் ஒரு மில்லியன் கிலோமீட்டர்கள் பறந்த அனுபவமிக்க பவுர் என்ற பைலட்டையே தனது தனி விமானத்தின் பைலட்டாக ஹிட்லர் நியமித்தார். பழுத்த அனுபவம் வாய்ந்த அவர், விமான பழுது குறித்து கண்டறிவதிலும் வல்லராக இருந்ததே காரணம். தேர்தல் பிரச்சாரத்தின்போதும் இவர்தான் பைலட்டாக இருந்தார். ராசியாக இருக்கலாம் தேர்தல் பிரச்சாரத்தின்போது பைலட்டாக இருந்த பவுர் ஹிட்லரை பெரிதும் கவர்ந்துவிட்டார். அவரை மிகவும் வெற்றிகரமானவராக கருதிய ஹிட்லர் தன்னுடனே அவரை வைத்துக் கொள்ள விரும்பினார். அந்தஸ்துமிக்க பைலட் பவுர் ஹிட்லர் விமானத்தின் அதிகாரப்பூர்வ பைலட்டாக மட்டுமின்றி, தனது பாதுகாப்பு குழுவினரின் தலைவராகவும் அவரை நியமித்தார்.

கிட்லர் அசைவத்தை வெறுப்பவர்! மனிதரையும், காகத்தையும் தவிர பிற உயிர்களிடத்தில் பேரன்பு கொண்டவர்.

பவுர் மீது மிகுந்த நம்பிக்கையும், பாசமும் கொண்டிருந்த ஹிட்லர், அவரை சைவ பிரியராக மாற்ற முயற்சித்தார். ஆனால், அது நடக்கவில்லை. இதையடுத்து, தனது 40வது பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது, பவுருக்கு பிடித்த பன்றிக்கறி உணவுடன் விருந்து வைத்ததுடன், பவர் வைத்திருந்த ·.போர்டு காருக்கு மாற்றாக புதிய மெர்சிடிஸ் பென்ஸ் சொகுசு காரையும் அன்பளிப்பாக வழங்கினார்.
பவுர் இரண்டாம் உலகப்போரின்போது சோவியூத் யூனியன் ராணுவத்தால் பவுர் சிறைபிடிக்கப்பட்டார். அதன் பிறகு 10 ஆண்டுகள் கழித்து பிரான்ஸிற்கு நாடு கடத்தப்பட்டார். அங்கு 1957ம் ஆண்டு வரை சிறையிலிருந்த அவர் 1993ம் ஆண்டு ஜெர்மனியிலுள்ள பவேரியா என்ற இடத்தில் காலமானார்.

நடை பவனியாக ஆரம்பித்த தேர்தல் பிரச்சாரம் பின் சைக்கிளாக புகையிரதமாக தற்போது சிறு ரகவிமானமாக மாறி உள்ளது. இது காலமாற்றம். ஆரம்பத்தில் பேசப்படும் பொருளாக இருந்தாலும் நாளடைவில் இவை பேசாப் பொருளாகிவிடும். ஆதாரம்:தட்ஸ்தமிழ்






# மாதவிடாய் நிற்கும் காலத்தின் பெண்களின் எடை அதிகரிப்பு! தவிர்க்க முடியாதா?

டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்

தவிர்க்க முடியாதா? மாதவிடாய் நிற்கும் காலத்தின் எடை அதிகரிப்பு ?
"உங்கடை நிறை கூடிக்கொண்டு போகுது. அதைக் குறைக்க வேண்டும்" என்றேன்.
"உங்களுக்குத் தெரியும்தானே டொக்டர். எனக்கு இந்த பீரியட் நிண்டாப் போலைதான் உடம்பு போட்டுட்டுது" என்றார்.

அது ஏற்கனவே எனக்குத் தெரிந்ததுதான். குடும்ப மருத்துவர்களுக்கு இத்தகைய விடயங்களைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அது தெரிந்திருந்தும் அவரது எடையைக் குறைப்பது அவசியம் என்பதை உணர்ந்ததாலேயே எடை குறைப்பு பற்றிப் பிரஸ்தாபித்தேன்.

அவர் சொன்னதிலும் உண்மை உள்ளதுதான். ஆனால் மாற்ற முடியாதது அல்ல.

weight-gain-after-menopause

பெரும்பாலான பெண்களுக்கு மாதவிடாய் நிற்கும் காலங்களிலும் அதைத் தொடர்ந்து மாதவிடாய் முற்றாக நின்ற பின்னரும் எடை அதிகரிக்கவே செய்கிறது. இடை அழகியாக இருந்தவர்கள் சள்ளை தொங்கும் குண்டுப் பீப்பாய்களாக மாறுவர்கள். இடுப்பில் மட்டுமின்றி வயிறும் பெரிதாகும். அன்ன நடை நடந்த பெண்கள் ஆயாச நடையில் அரங்கி அரங்கி நடப்பார்கள்.

இது உங்களுக்கும் வரவேண்டுமா?

மாதவிடாய் பொதுவாக 50ற்கு சற்று முன் பின்னராக நின்று போகிறது. 50 முதல் 59 வயதுவரையான பெண்களில் 30 சதவிகிதமானவர்களின் எடை அதிகரிக்கிறது. சாதாரணமான அதிகரிப்பு உள்ளவர்களாக (Over Wight) மட்டுமின்றி அதீத எடை (Obesity) உள்ளவர்களாகவும் அவ் வயதுப் பெண்கள் மாறுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

early-menopause-information

அவ்வாறாயின் மாதவிடாய் நின்ற பெண்களில் எடை அதிகரிப்பது நியதியா என்று கேட்டால். இல்லை என்றே சொல்லலாம். போஷாக்கான உணவு முறைகளையும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையையும் கடைப்பிடித்தால் அந்நேரத்திலும் எடை அதிகரிப்பைத் தடுக்க முடியும்.

### ஏன் அதிகரிக்கிறது

மாதவிடாய் நிற்கும் போது பெண்களில் உடலிலுள்ள பெண் ஹோர்மோனான ஈஸ்ரோஜன் அளவுகளில் வீழ்ச்சி ஏற்படுகிறது. இந்த மாற்றமானது உடலின் இயக்கத்தின் வேகத்தைக் குறைத்து சோம்பலைக் கொண்டு வருவதுடன் அதிகமாக உண்ணவும் வைக்கிறது என எலிகளில் செய்யப்பட்ட ஆய்வு ஒன்று கூறுகிறது. இது பெண்களுக்கும் ஏற்புடையதாக இருக்கலாம்.

hormone-graph

அதேபோல ஈஸ்ரோஜன் அளவு குறையும்போது உடலின் வளர்சிதை மாற்ற விகிதம் (metabolic rate) தாழ்ச்சியுறுகிறதாம். மாதவிடாய் நின்ற பெண்களின் சில பிரச்சனைகளுக்காக ஈஸ்ரோஜன் மாத்திரைகளை மருந்தாகக் கொடுக்கும்போது அவர்களது உடலின் வளர்சிதை மாற்ற விகிதம் அதிகரிப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.
அத்துடன் அத்தகைய ஹோர்மோன் மாற்றம் ஏற்படும்போது உடலானது மாப்பொருளையும் குளுக்கோசையும் பயன்படுத்தும் ஆற்றல் குறைகிறது. இதனால் அவை உடலில் கொழுப்பாக சேமிக்கப்பட்டு எடை அதிகரிக்கிறது என்கிறார்கள்.

தொடர்ச்சி 10ம் பக்கம்...




T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!
MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

Graphic design Vettimaniy Ltd

09 பக்கத் தொடர்ச்சி

## பெண்களின் எடை அதிகரிப்பு!



மாதவிடாய் நிற்கும் கால எடை அதிகரிப்பிற்கு ஹோர்மோன் மாற்றங்கள் ஒரு காரணமாகச் சொல்லப்பட்டபோதும் அது தவிர்ந்த வேறு பல காரணங்களும் இருக்கின்றன. வயதாகும்போது உடல் உழைப்புச் செயற்பாட்டிலும் வாழ்க்கை முறையிலும் ஏற்படும் மாற்றங்கள் முக்கியமானவை.

உதாரணமாக வயசாகும்போது தசைகளின் திணிவு குறைகிறது. அதே நேரம் அதிலுள்ள கொழுப்பின் அளவு அதிகரிக்கிறது. தசைத் திணிவு குறையும்போது அவற்றால் முன்னரைப் போல கலோரிச் சத்தை பயன்படுத்த முடிவதில்லை. ஆனால் இவை தவிர்க்க முடியாத விடயங்கள் அல்ல. உட்கொள்ளும் உணவைச் சற்றுக் குறைத்து உடற் செயற்பாட்டை அதிகரிப்பதன் மூலம் எடை ஏறுவதை நிச்சயமாக் குறைத்துக் கொள்ள முடியும்.
வேறு வார்த்தைகளில் சொல்லவதானால் இள வயதில் உட்கொண்டது போன்ற அளவுகளில் உணவுகளைத் தொடர்ந்து உட்கொண்டபடி உடலுக்கு போதியளவு வேலையைக் கொடுக்காவிட்டால் எடை அதிகரிக்கவே செய்யும்.

பரம்பரை அம்சங்களும் அந்நேர எடை அதிகரிப்பிறகு காரணமாகலாம். உதாரணமாக உங்கள் அம்மா அல்லது அப்பா தொந்தியும் சள்ளையும் கொண்ட பருத்த உடல்வாகு உள்ளவரானால் நீங்களும் அவ்வாறு ஆவதற்கான சாத்தியம் அதிகமே.
மன உழைச்சல்களும் காரணமாகலாம். அந்த வயதில் பிள்ளைகள் உங்களை விட்டுப் பிரிய நேரலாம், கணவன் மரணமடையலாம், மணமுறிவு ஏற்படலாம். இத்தகைய சம்பவங்களால் மன உழைச்சல்கள் ஏற்படலாம். அதன் காரணமாக ஒருவர் தனது உணவு முறையில் அக்கறை செலுத்தாது விடுவார்கள். மனம் தளர்ந்து சுறுசுறுப்பாக இயங்காது சோர்ந்து கிடக்கவும் செய்வர். இவற்றால் எடை அதிகரிக்கும்.

60 சதவிகிதமானவர்கள் தங்கள் முதுமையில் போதுமான உடற்பயிற்சி செய்வதில்லை என அறிக்கைகள் கூறுகின்றன. தொடர்ந்து வயது அதிகரிக்கும்போது உடல் இயக்கத்தில் குறைபாடும் அதிகரிக்கிறது. இதைத் தவிர்த்து உள பூர்வமாக உடற் பயிற்சிகளில் ஈடுபடுவது அவசியமாகும்.

**எடை அதிகரிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் எவை**

உடல் எடையானது தேவைக்கு அதிகமாக அதிகரிக்கும் போது உடலில் பல்வேறு சிக்கல்களும் நோய்களும் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

பிரஸர் அதிகரிக்கும்,
நீரிழிவு நோய் வருவதற்கான சாத்தியம் அதிகமாகும்.
மாரடைப்பு நோய்க்கான சாத்தியமும் அதிகமாகும்.
அதைபோல மூட்டு வருத்தங்களுக்கான சாத்தியம் அதிகரிக்கும்.
குண்டான பலர் முழங்கால் மூட்டில் தேய்வு வீக்கம் என அவதிப்படுவதை நீங்களே அவதானித்திருப்பீர்கள்.

எடை அதிகரிப்பானது கொழுப்பு அதிகரிப்பதோடு தொடர்புடையதுதானே. இந்த கொழுப்பானது வயிற்றறைப் பகுதியில் அதிகமாகவே சேரும். அதனால் வயிறு பானைபோலாகும். வயிற்றறைச் சுற்றளவானது 35 அங்குலத்திற்கு அதிகமானால் அது மேலே கூறியது போன்ற பலவித ஆபத்துக்களை ஏற்படுத்தும் என்பது தெரிந்ததே. எனவே அதைத் தவிர்க்க வேண்டும்.

**எடை அதிகரிப்பதைத் தடுப்பது எப்படி?**

எடை அதிகரிப்பதை எடையைக் குறைப்பதற்கு மாயாஜால முறைகள் எதுவும் கிடையாது. மருத்துவர்கள் கிறுக்கித்தரும் மாத்திரைகளோ, ஊடகங்களில் விளம்பரப்படுத்தும் மருந்துகளோ, கிறீன் ரீயோ, கொள்ளுச் சாப்பிடுவது போன்றவையோ மட்டும் உதவப் போவதில்லை.

**உங்கள் முயற்சிதான் அதிமுக்கிய விடயாகும்.**

**1.சோர்ந்திருக்காதீர்கள்**
கூடியவளவு உடல் உழைப்பில் ஈடுபடுங்கள். சோர்ந்து கிடக்காதீர்கள். நடந்தால் கால் உழைவு கை உழைவு என்று சாட்டுச் சொல்லாதீர்கள். முயற்சியில் இறங்குங்கள். அந்த வயதிற்கு ஏற்றது நடைப் பயிற்சி. வாரத்தின் பெரும்பாலான நாட்களில் 30 நிமிடங்களுக்கு குறையாது கை கால்களை விசுக்கி வீசி நடவுங்கள். துள்ளல் நடை நீச்சல் பயிற்சிகளும் நல்லது. வீட்டுத் தோட்டம் செய்யுங்கள். மாடிப்படிகளில் ஏறி இறங்குங்கள்.
இவற்றைத் தவிர நாளாந்த வீட்டு வேலைகளிலும் ஈடுபடுங்கள். கூட்டுங்கள் கழுவுங்கள், தூசு தட்டுங்கள்.
2.உணவில் கவனம் எடுங்கள்.

சாப்பிடுங்கள் பட்டினி கிடக்காதீர்கள். உணவைத் தவிர்க்காதீர்கள்
ஆனால் உணவின் அளவிலும் எத்தகை உணவு உண்பது என்பதிலும் மாற்றங்கள் செய்யுங்கள். எண்ணெய் பொரியில் கொழுப்பு போன்றவற்றைத் மிகவும் குறையுங்கள். சோறு இடியப்பம் புட்டு பாண் போன்ற மாப்பொருள் உணவுகளை அளவோடு உண்ணுங்கள். அல்லது சற்றுக் குறையும். அதற்கான மொத்த உணவின் அளவைக் குறைக்க வேண்டியதில்லை. காய்கறிகள் பழவகைகளை அதிகம் சேருங்கள்.

**3. கலோரி வலு**

அதே போல அருந்தும் பானங்களும் அதிக கலோரி வலு அற்றதாக இருக்க வேண்டும். மென்பானங்கள், இனிப்பூட்டிய பழச் சாறுகள், போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். நாளாந்த அருந்தும் தேநீர் கோப்பி போன்றவற்றிக்கு சேர்க்கும் சீனியின் அளவையும் குறைப்பது அவசியமாகும்.

தண்ணீர், மோர். அதிகம் இனிப்பு சேர்க்காத உடன் பிழிந்த பழச்சாறுகள், இளநீர் போன்றவற்றை கூடியளவு உபயோகியுங்கள்.
இவற்றைக் கடைப்பிடித்தால் மாதவிடாய் நின்ற பின்னரும் மோகவைக்கும் குமரிபோல உங்கள் உடல் வனப்பைப் பேணிக்கொள்ளலாம்.
நன்றி: ஹாய் நலமா









# ரோபோவாக வருவாளா? வந்துவிட்டாள் பாருங்கள்!




கனவுகள் காணுங்கள் என்றார் விஞ்ஞானி அப்துல்கலாம். அந்தக்கனவுகள் அறிவுபூர்வமாக இருக்கவேண்டும், சமுதாயத்திற்கு நன்மைதருவனவாக இருக்கவேண்டும். இவைதான் இளைஞர்களின் கனவாகவேண்டும். இந்தியாவில் அவர் காணச்சொன்ன கனவு அண்டை நாடான சீனாவரை கேட்டுவிட்டது.

கொங் கொங்கில் ஒரு இளைஞன் ஓர் இன்பமான கனவு கண்டான். திருமணமானால் மனைவி எப்படி எல்லாம் அன்பாக மகிழ்வாக குடும்பப் பொறுப்பை ஏற்று வீட்டில் எல்லாப் பணிகளையும் வேலை என்று பாராது இன் முகத்துடன் செய்வாளோ! அதுபோன்ற ஒரு ரோபோவை உருவாக்கவேண்டும் என்ற நீண்டநாள் கனவுகண்டான். அவன் பெயர் Ricky Ma. இவர் ஒரு சிறந்த (graphic designer) கணனிவடிவமைப்பாளர். இவர் கனவு ஏழ்மையான கனவு அல்ல. பணக்காரக் கனவு. இந்தக் கனவை நனவாக்க 50.000 டொலர்வரை செலவு செய்துள்ளார்.

அவர் கனவு நிறைவேறியது. அவருக்கு வேண்டி தேவைகளை மின்வாங்கியில் சொல்லச் சொல்ல அந்த ரோபோ அழகாகச் செய்து முடித்தது. காதலுக்கு முக்கியம் இதயம் என்றாலும் முகவரி முகம்தானே! எனவே அந்த ரோபோவிற்கு அழகானமுகத்தை அமைத்தார். அமைக்கும் போதும் வஞ்சனை இல்லாது தனக்குப்பிடித்த கொலிவூட் நடிகையின் முகத்தை, தோற்றத்தை அப்படியே தனது ரோபோவிற்கும் கொடுத்தார். அந்த நடிகை வேறு யாருமல்ல. Scarlett Johansson.





அந்த நடிகை சிரிக்கும்போது எப்படி எல்லாம் உதடுகள் பூக்குமோ அதற்கு எவ்வித குறையும் இன்றி இந்த ரோபோவின் இதழ்களும் பூக்கும் தன்மை கொண்டதாக இருந்தது.
அடிக்கடி அந்த ரோபோவுடன் செல்பி எடுத்துக்கொண்டான் அந்த இளைஞன். அப்போது எல்லாம் அதன் கண்களை சுற்றி நிதானமாக ஒரு மலர்ச்சியும். அதன் உதடுகள் ஓரத்திலும் உயர்த்த, ஒரு புன்னகை உருவாக்கும். சீனாவில் திருமண வயது உயர்ந்து கொண்டே செல்லும் இந்நேரம். இப்படியான ரோபோக்களின் வரவால் மேலும் திருமணவயது உயரப்போவது கலக்கத்தைக் கொடுப்பதாகச் சொல்லப்படுகின்றது.



ரோபோக்களின் வரவும், எழுச்சியும் உலகப் பொருளாதாரத்தை மாற்றும் என எச்சரிக்கிறார். அடுத்த ஐந்து ஆண்டுகளில் 5.1 மில்லியன் வேலை இழப்பு ஏற்படும்.வேலைகள் சீர்குலையும். தொழிலாளர் சந்தையில் மாற்றங்களை இவை கொண்டுவரும் என்றும் கருதப்படுகின்றது.
யேர்மனியில் கூட அன்று 1980 களில் இருந்தவை போன்று இன்று இல்லையே. ஒரு வேலையை நூறுபேர் செய்தார்கள். தற்போது நூறு வேலையை ஒரு ரோபோ அல்லவா செய்கின்றது.
வீட்டில் அன்று போலவா? இன்று ஆண்களும், பெண்களும் இருக்கின்றார்கள். ஒரு முறை சரி, இரண்டாம் முறை எது செய்வதாக இருந்தாலும், வாய் முணு முணுப்பு தாங்கமுடியுமா? ஆனால் இந்த ரோபோக்கள் எத்தன தடவை என்றாலும் திரும்பத் திரும்ப அன்பாகவே பேசும்.

நீ அழகாய் இருக்கிறாய் என்று சொன்னால், ஏதும் காரியமாகச் சொல்வதாக எண்ணி முறைக்காமல், சிரித்தபடியே நன்றி சொல்லும். இதற்குமேல் ஒருவனுக்கு எது வேண்டும்.



# அமரர்கள்: செங்கையாழியான் பீர்முகம்மது புன்னியாமீன்

## அவர்களுக்கு யேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம் நினைவஞ்சலி

அமரர்கள்:– கந்தையா குணராசா (செங்கையாழியான்)
(25.01.1941 28.02.2016)



பீர்முகம்மது புன்னியாமீன்
(11.11.1960 10.03.2016)






இலங்கைத் தமிழ், கல்வி, கலை, இலகியம், எழுத்து வரலாற்றில் அழியாப்புகழ் படைத்த பலர் வாழ்ந்து சரித்திரம் படைத்திருகிறார்கள். பெரும்புலவர்கள், பண்டிதர்கள், அறிஞர்கள், கல்விமான்கள் என எண்ணிலடங்காதோர் ஆற்றிய பணிகளே இன்றும் நம் தமிழ் உயிர் வாழ்ந்துகொண்டிருக்கிறது என்பது பெருமையே. தமிழுலக வரலாற்றில் பல எழுத்தாளர்கள் விலைமதிக்க முடியாத அரிய பொக்கிஷங்களாகத் தமது வெளியீடுகளையே தமது சொத்தாக விட்டுச் சென்றிருக்கிறார்கள். முதுபெரும் எழுத்தாளர்கள் இருவர் அடுத்தடுத்து இவ்வுலகைவிட்டுப் பிரிந்தமைகண்டு தமிழுலகமே கண்ணீர் வடித்தது. இந்த இருவரையும் போற்றி, அவர்களின் பணிகளை உலகறியச் செய்யும் வகையில் ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கத்தால் நினைவஞ்சலிக்கூட்டம் கடந்த 30-04-2016 அன்று ஜேர்மனியில் சிறப்பாக நடைபெறறது.

# கருத்துக் கணிப்பு படத்துக்கு முன்வரும் ட்ரைலர் போலவாம்! தேர்தலும் சினிமாவும் ஒன்றுதான்.

சென்னை: மக்களை கட்சிகளிடம் அடமானம் வைக்கவா கருத்துக் கணிப்பு நடத்துகிறீர்கள் என நியூஸ் 7 தொலைக்காட்சிக்கு கேள்வி எழுப்பினார் இயக்குநர் தங்கர் பச்சான். நியூஸ் 7 தொலைக்காட்சியும் தினமலர் பத்திரிகையும் சமீபத்தில் ஒரு கருத்துக் கணிப்பை வெளியிட்டன. இந்தக் கணிப்பு குறித்து கடுமையான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

மேலும் இயக்குநர் தங்கர் பச்சான். அவர்களையும், கருத்துக் கணிப்பு குறித்த நேரலை விவாதத்துக்கு நியூஸ் 7 தொலைக்காட்சி அழைத்திருந்தது. அங்கும் தனது கருத்தை தயங்காமல் முன்வைத்தார் தங்கர் பச்சான். விவாதத்தில் அவர் எழுப்பிய கேள்வி: "இப்போது இந்த கருத்துக்கணிப்புக்கான அவசியம் என்ன? யாரைத் திருப்திப்படுத்த இந்தக் கருத்துக் கணிப்பை நடத்தி வெளியிட்டீர்கள்? யாரிடம் நீங்கள் கேள்வி கேட்டீர்கள்? திரும்பத் திரும்ப பரம்பரை கட்சிகளிடம் மக்களை அடகு வைப்பதுதான் உங்கள் நோக்கமா? மாற்று அரசியல் சக்திகள் பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்லும் பொறுப்பு ஊடகங்களுக்கு இல்லையா? மீண்டும் மீண்டும் மக்களை அரசியல் கட்சிகளிடம் அடகு வைக்கத்தான் இந்த மாதிரி கருத்துக் கணிப்பை நடத்தினீர்களா?" தங்கர் பச்சான் இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்லத் தெரியாமல் விழித்த நிகழ்ச்சி நடத்துனர், "சினிமாவுக்கு டீசர், ட்ரைலர் விடுவது போலத்தான் இந்த கருத்துக் கணிப்பும்" என்று சொல்லி வைத்தார். "அப்படீன்னாஇ ஒரு சினிமாவும் தேர்தலும் ஒன்றா.. உங்கள் பார்வையில் தேர்தல் என்பது ஒரு சினிமா மாதிரியா?" என்று தங்கர் பச்சான் மீண்டும் கேட்க, நடத்துநர் விழித்தார்.

என்.டி.டி.விக்கு அளித்த பேட்டியில் தேமுதிக தலைவர் விஜயகாந்த் ஆங்கிலத்திலும் தமிழிலும் கலந்து பேசிஇருக்கிறார். என்.டி.டி.வியின் பிரண்ணாய் ராய் தலைமையிலான 3 பேர் கொண்ட டீம் விஜயகாந்திடம் ஆங்கிலத்தில் கேள்விகளை கேட்கிறது. விஜயகாந்த். இந்த தேர்தலில் உங்களது பங்கு என்ற கேள்விக்கு, தேமுதிக தலைவா் விஜயகாந் சொல்லியுள்ளார்.

தான் கதாநாயகன், கலைஞர் வில்லன். ஜெயலலிதா வில்லி என்று. அப்படி என்றால் தேர்தலும் சினிமாவும் ஒன்றுதான். அப்படி என்றால் இது வரை விஜயகாந் பற்றி நினைத்தது எல்லாம், வெறும் ஜோக்கா. காமடி பீஸ் இல்லையா? கமடி கிமடி பண்ணலேயே! இன்று கருத்தக்கணிப்பும் மக்களிடம் ஒரு வகையான கருத்துத் திணிப்பே!















“யானும் வந்தேனொரு சித்தனிந்த நாட்டில்” எனக்கூறி ஓர் சித்தனாய், வித்தனாய், பித்தனாய், சக்திப க்தனாய் விளங்கியவர் பாரதி. “பார்க்கும் இடத்திலெல்லாம் நந்தலாலா” என்று கண்ணனை மட்டுமன்றி தன் உள்ளக ஞான நிலையில்

“அட விண்ணிலும் மண்ணிலும் கண்ணிலும்
எண்ணிலும் மேவு பராசக்தியே”

என்று எட்டுத்திக்கும் காணும் சக்தியே முக்திக்கு யுக்தி என்றுணர்ந்தவர் பாரதி

தன் ஐம்பொறிகளையும், அங்கங்களையும் சக்தி தனக்கே கருவியாக்கு (சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம்) என்று எண்ணும் சக்தி தாஸன், பண்ணுகின்ற காரியங்கள் யாவற்றிலும் வெற்றி கிட்ட அனுக்ரஹம் செய்க என வேண்டுகிறார்.

“செய்யும் வினைகள் அனைத்திலுமே
வெற்றி சேர்ந்திட நல்லருள் செய்க என்றே”

அது மட்டுமன்றி உனையறியாதிருந்த பாவ காலத்தில் பண்ணிய வினைகளையும் அவளேயே களைந்திட வேண்டும் என்கிறார்.

“பண்ணிய பாவமெல்லாம்
பரிதி முன் பனியைப் போல
நண்ணிய நின் முன் இங்கு
நசித்திடல் வேண்டும் தாயே”

சித்தம், செயல், வாக்கு யாவும் உன் இயக்கம் என்று எண்ணும் நிலையில் பயன் எண்ணாமல் உழைத்து உயர் இலட்சியங்களை அடைந்து புகழ் பெற வேண்டும் என்று கேட்கிறார்.

“பயன் எண்ணாமல் உழைக்கச் சொன்னாள்
பக்தி செய்து பிழைக்கச் சொன்னாள்

“புகழுடன் வாழ்ந்துயர்
நோக்கங்கள் பெற்றிட வேண்டுமென்றே”

ஏதேனும் தீதேனும் வரினும், பராசக்தியினுடைய இதமான கருணையின் வெளிப்பாடே என்று கருதி மனதினைத் தேற்றிக் கொள்ள வேண்டும். அவளருளால் அத்துன்பம் கூறுகூறாகி தெறித்து ஓடிவிடும் என்கிறார்.

“சக்தி சக்தி என்று சொன்னாலே போதும் தாமாகவே துன்பம் விலகும், இன்பம் கிட்டும், முக்தி வேராகும். வெற்றி நேரும், செல்வம் ஊறும், கல்வி தேறும் என்று புகழுரைக்கிறார்.

“சக்தி என்பார் ஒண்மை கண்டார்
உயர் வண்மை கண்டார்”

பூரண சரணாகதியான பின் லௌகீக நாடகத்துள் உழலும் அச்சங்கள் யாவும், நம்மை விட்டு அகல்வது நிட்சயம். பாரதி மெஞ்ஞானத்தின் அதிமேதகு நிலையில் தம்மை வலுப்படுத்தியவர்.

தம் மனதையும் உடலையும் மஹா சக்தியிடத்து அர்ப்பணித்தமையை அவரது உள்ளக் கவி பல சான்று பகர்கிறது.

“மரணமும் அஞ்சேன்,நோய்களை அஞ்சேன்
மாரவெம் பேயினை அஞ்சேன்”

என வாழ்வியலில் வருந்தும் விடயங்களில் இருந்து விடுபட்டு இருந்தார்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆஹாயம் எனப் பஞ்சபூதங்கள் நிறைந்து: மெய், வாய், கண் மூக்கு, செவி, எனப் பஞ்சேந்திரியங்களைக் கடந்து, யாதுமாகி யாவற்றிலும் சகலமுமாய் நின்றாடும் மெய்யறிவாகி நிற்கிறாய் காளி!

மந்த மாருதத்தில், வானில், மலையின் உச்சி மீதில் சிந்தை எங்கு செல்கிறதோ அங்கெல்லாம் உன் அழகு மட்டுமே தோன்றுகிறது!

எங்கணும் உன் சௌந்தர்ய அழகைக் காண்பதினால் நீ இன்பமாகி விட்டாய்! பேரானந்த அதியுன்னத உணர்வில் என் மனரெக்கையில் பறந்துலவும் அற்புத நிலையை அடைகிறேன். ஆங்கு என் அகத்தினுள் மெல்ல நுழைந்து புகுந்துவிட்டாய். இவ்வாறிருக்க உனைப் பிரிந்து யான் இருப்பேனா? நீ உள் நின்று உள்ளொளி பெருக்குவதால் அச்சம் தொலைத்து, ஆனந்தம் நிறைய அன்பெனும் உயர் பண்பினை மட்டுமே உணர்கிறேன்.

“இன்பமாகி விட்டாய் - காளி
எனடனுள்ளே புகுந்தாய்”

நேயத்தோடு மிக்க ஆவலாய் உன் சுகவரம் பற்றிப் பேசினாலே உள்ளம் நெகிழ்ந்து இளகித் தித்திக்கிறதே! உன்னோடு நெஞ்சம் என்றும் கலந்து நிற்க வேண்டும்.!

“நேய மோடுரைத்தாய் - ஆங்கே
நெஞ்சு இளக்கம் எய்தும்.”

இப்புவி மீது மானுடர்கள் வாழும் பொய்யான வாழ்க்கை போதும். தீது நன்மை எல்லாம் நின் செயலே! துயரில் உழலும் நெஞ்சம் வேண்டாம். பேசுறு நின் முகவருள் தரும் ஞான இரவியை என்னால் உவமிக்க வார்த்தையில்லை. வேறு எவராலும் கூட இயலுமா தோன்றவில்லை, ஆக மௌனம் மட்டுமே போதும்.“இனி எக்காலுமே அமைதியில் இருப்பேன்”

என்று மஹாசக்தியிடத்தான தூய மெய்யன்பை, ஆத்ம சக்தியை அமுதசுரபியாய் அள்ளித் தெளித்திருக்கிறார். ஆதி மொழியில் அற்புதக் கவிஞன் பாரதி!

சிவ பாகமாய் விளங்கும் சக்தியை உணர்ந்துருகித் தொழுது இன்றும் எஞ்சியுள்ள வாழ்க்கைக்குள் வீடுபேற்று நிலையைக் கைவசப்படுத்தலே பேரானந்தத்தின் உபாயம்!!!



**“ஆதி சிவனுடைய சக்தி எங்கள்
அன்னையருள் பெறுதல் முக்தி
மீதி உயிரிருக்கும் போதே அதை
வெல்லல் சுகத்தினுக்கு யுக்தி**






அது மட்டுமல்ல யேர்மனியில் இருந்து வந்திருக்கிறோம். சும்மாவா வந்திருக்கிறோம்? கடனோடு போனோம். இப்பொழுது காசோடு அல்லவா வந்திருக்கிறோம். சீமையில் இருக்கும் வசதிகளை சிறிய கிராமத்தில் உள்ள வசதிகளோடு ஒப்பிட ஆரம்பிக்கிறோம். எங்களது அடுத்த சந்ததிகளுக்கு அறிமுகம் செய்து வைப்பதற்கு ஊரில் ஆயிரம் இருந்தும் எங்கள் பேச்சு எல்லாம் எங்கள் வாழ்க்கையின் பெருமைகளை வசதிகளை எடுத்து விடுவதிலேயே கவனமாக இருக்கும்.

என்னதான் நாங்கள் எங்கள் வெளிநாட்டு வாழ்க்கையை விளாசித் தள்ளினாலும் எங்களை அணுகப் பயந்து ஒரு கேள்வி அங்கே தனித்திருக்கும். "இந்த சமூகத்துக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?" என்பதே அந்தக் கேள்வி. இதுவரை காலமும் எங்கள் நினைவுகளைச் சுமந்து வைத்திருக்கும் அந்த பூமிக்கு பிரதி உபகாரமாக எதைச் செய்யப் போகிறோம்.

## கடனோடு போனோம். இப்போ காசோடு வந்தோம்!

இந்த ஆண்டின் கோடை விடுமுறை வருகிறது. இப்பொழுது யேர்மனியர்களைப் போல் நாங்களும் கோடை விடுமுறை நேரம் வெளிநாடு பறந்து விடுகிறோம்.

"லீவுக்கு எங்கே போகப் போறீங்கள்?"

"வேறை எங்கே போறது? ஊருக்குத்தான்"

இப்படியான கேள்விகளும் பதில்களும் இன்றைய பொழுதில் எங்கள் மத்தியில் மத்தியில் சாதாரணம். ஆனாலும், "ஊருக்குப் போறீங்களோ? நீங்கள் குடுத்து வைச்ச ஆள் " என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு யேர்மனிக்கு வந்த கடனோடு, பின்னர் வாங்கிச் சேர்த்த கடன் என்று அந்தக் கடன்களுக்காகவே விடுமுறை நாட்களையே தெரியாத உழைப்பாளிகளும் எங்களிடம் இருக்கிறார்கள் என்பதையும் சொல்லித்தான் ஆகவேண்டும்

முப்பது வருடங்களுக்கு மேலான போராட்டம், நாட்டில் இருந்த அசாத்தியமான சூழ்நிலை, இத்தோடு பணப் பிரச்சனை என்று இன்ன பிற காரணிகள் புலம் பெயர் தமிழரை தாய் நாட்டை விட்டுத் தள்ளியே வைத்திருந்தன.

இப்பொழுது தாய் நிலத்தில் நிலைமை சற்று மாறி இருக்கிறது. அச்சம் கொஞ்சம் நீங்கி இருக்கிறது. எங்களிடம் பணமும் சேர்ந்திருக்கிறது. ஆகவே தாய் நாட்டை நோக்கி எங்கள் பறப்புகள் இப்பொழுது அதிகரித்து இருக்கின்றன.

நாங்கள் விட்டு விட்டு வந்த நிலையில் எங்கள் ஊர்களும், நகரங்களும், கிராமங்களும் இப்பொழுது இருக்காது. நிறையவே மாறிப் போயிருக்கும் சில இடங்கள் சிதைந்து சின்னா பின்னமாகப் போயிருக்கும். பல இருந்த இடம் தெரியாமல் சுவடு கூட மறைந்திருக்கும். முப்பது வருடங்களுக்கு முன்னர் நாம் காணாத பலர் எங்கள் வீட்டுக்கு அருகே வசித்துக் கொண்டிருப்பார்கள். எங்களது நண்பர்களோ அல்லது உறவினர்களோ அவர்களை எங்களுக்கு அறிமுகம் செய்து வைப்பார்கள். அவர்களும் எங்களை புதுமையாகப் பார்ப்பார்கள் சிலர் வரவேற்கவும் செய்வார்கள்.

நாங்கள் படித்த பாடசாலை, நாங்கள் திருவிழா கண்ட ஆலயங்கள், விளையாடிய மைதானங்கள் ஒளித்து நின்று கள்ளுக் குடித்து களித்திருந்த இடங்கள் எல்லாம் போக வேண்டும். அந்த இடங்களை படம் பிடித்து முகநூலில் போட்டு நண்பர்களுக்குக் காட்ட வேண்டும் என்று எத்தனையோ நினைவுகளோடு பயணம் ஆரம்பிக்கும்.

குளிர் காலத்தில் வெய்யில் நாடி பறவைகள் வருவது போல் நாங்கள் ஆடியில் விடுமுறையை கழிக்க வந்த மனிதர்கள் என்று சொல்லப் போகிறோமா? அல்லது துயரங்கள் சுமந்த உங்கள் வலிகளைத் துடைக்கும் வலிமைகள் எங்கள் கைகளுக்கு இருக்கிறது என்று காண்பிக்கப் போகிறோமா?

இந்த விடயத்தை ஒவ்வொருவரது சுயமான சிந்தனைக்கு விட்டு விடுவதுதான் பொருத்தமானது.

இலங்கையில் சுனாமியால் வந்த அனர்த்தங்களை உலகம் கண் கொண்டு பார்த்து, வந்து நின்று, தொண்டு செய்து போனது. முள்ளிவாய்க்காலில் ஆமியால் வந்த அவலங்களை ஏனோ கண்ணை மூடிப் பாராமல் கிடந்தது. அதை விட்டு விடலாம். பேசிப் பிரயோசனம் இல்லை. ஆனால் நாங்கள் கூடிப் பேசி சேர்ந்து செய்ய ஏராளம் எங்களுக்கு முன்னால் நிறைந்திருக்கின்றன. தாயகத்தில் மகிழ்ச்சியாக இருக்கும் உங்கள் தருணங்களில் எங்கள் சமூக முன்னேற்றத்திற்கு தேவையானவற்றை இனம் காணுங்கள். அப்படி இனம் காணும் பொழுதில் அடுத்து நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது உங்களுக்குத் தானாகவே புரிந்து போகும்.

உங்களது தாயகம் நோக்கிய பயணம் இனிதாக மட்டுமல்ல பயனுள்ளதாகவும் இருக்கட்டும்.









| | | | |
|---|---|---|---|
| கம் காமாட்சிஅம்பாள் கோவில் | | கொடியேற்றம் | 20.06.2016 |
| | Siegenbeck Str-4-5<br>59071 Hamm-Uentrop | தேர் | 03.07.2016 |
| டோட்முன்ட் சிவன் கோவில் | | கொடியேற்றம் | 09:07:2016 |
| | Kiefer Str.24<br>44225 Dortmund | தேர் | 17.07.2016 |
| கம் முருகன் கோவில் | | கொடியேற்றம் | 16.07.2016 |
| | Roon Str.2a<br>59065 Hamm | தேர் | 24.07.2016 |
| கோமஸ்பாக் முருகன் கோவில் | | கொடியேற்றம் | 16.07.2016 |
| | Industrie Str.7<br>51643 Gummersbach | தேர் | 24.07.2016 |
| சுவெற்றா<br>ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் கோவில் | | கொடியேற்ரம் | 23.07.2016 |
| | Robert koch Str.5a<br>58239 Schwerte | தேர் | 31.07.2016 |
| கம் பிள்ளையர் கோவில் | | கொடியேற்றம் | 30.07.2016 |
| | Ferdinand poggel Str.25<br>59065 Hamm | தேர் | 07.08.2016 |

தொகுப்பு: ஆன்மீகத்தென்றல் த.புவனேந்திரன்

# தேர்த் திருவிழா

தேர்த் திருவிழா என்பது பலதரப்பட்ட மக்களை ஒன்று சேர்க்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது. ஊர்கூடித் தேர் இழுத்தால் தான் தேர்த் திருவிழாவினைக் கொண்டாட முடியும். இது ஒற்றுமையை மறைமுகமாக வலியுறுத்தும் விழா என்று கூட கொள்ளலாம்.

தேரோட்டம் என்பது பல மதங்களிலும் பல தெய்வங்களின் சிலைகளையோ சிலையையோ சின்னங்களையோ இதற்காக உருவாக்கப்பட்ட தேரில் வைத்துப் பலர் சேர்ந்து ஊர்வலமாக இழுத்து வரும் ஒரு விழாவாகும். இந்தியாவிலும், இலங்கையிலும் இந்துக் கோயில்களில் இடம்பெறும் ஆண்டுத் திருவிழாக்களில் மிக முக்கியமான திருவிழாவாக இது அமைகின்றது. கோயில்களைப் பொறுத்துப் 10 நாட்கள் முதல் 25 நாட்கள் வரை பல நாட்கள் தொடர்ச்சியாக இடம்பெறும் இத்தகைய திருவிழாக்களில் இறுதியான தீர்த்தத் திருவிழாவுக்கு முதல் நாள் தேரோட்டத் திருவிழா இடம்பெறுவது வழக்கம். இத்திருவிழாவில் ஒன்று, மூன்று அல்லது ஐந்து தேர்கள் இடம்பெறுவது உண்டு. ஒன்றுக்கு மேற்பட்ட தேர்கள் இடம்பெறும் போது கோயிலின் தலைமைக் கடவுளுக்குப் பெரிய தேரும், பிற கடவுளருக்கு முக்கியத்துவத்தில் அடிப்படையில் சிறிய தேர்களும் இருக்கும்.

**வரலாற்றுக் குறிப்புகள்**

சங்க இலக்கியங்களிலும், சங்கம் மருவிய காலத்து இலக்கியங்களிலும் தேர்கள் குறித்த செய்திகள் உள்ளன. சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களிலும் தேர்கள் புழக்கத்தில் இருந்தமைக்கான சான்றுகள் உள்ளன. சிலப்பதிகாரம் புத்த சமயத்தவரின் தேர்த் திருவிழா பற்றிக் குறிப்பிடுகின்றது. அக்காலத்துத் தேர்கள் எதுவும் இன்றுவரை நிலைத்து இருக்கவில்லை. இன்றுள்ள மிகப் பழைய தேர்கள் விஜயநகரக் காலத்தைச் சேர்ந்தவை.

**வீதியுலா**

பெரிய கயிறுகள் தேரில் இணைக்கப்படும், அவற்றை ”வடம்” என்று கூறுவர். இவ்வடத்தைப் பற்றி இழுத்துச் செல்வதை ”வடம் பிடித்தல்” என்பர். கோவிலைச் சுற்றி தேர் செல்லக்கூடிய அளவு அகலமான வீதி அமைந்த இடங்கள் ரத வீதிகள் என்று அழைக்கப்படும்.தேர் செல்லும் வழி எங்கும் மக்கள் தத்தம் வீட்டு வாசலில் வண்ணக் கோலம் போட்டு, வழிபாட்டுப் பொருட்களுடன் வாசலில் நின்று கொண்டு இருப்பார்கள். தேரோட்டத்தன்று இறைவன் எழுந்தருளிய எழில்மிகு தேரை வடம் பிடித்து ஊர்மக்கள் யாவரும், அந்த ரதவீதிகளில் தேரை இழுத்து வருவர்.இறைவனின் திருநாமத்தைச் சொல்லி தேர் இழுப்பவர்களுக்கு நீர்மோர், பானகம், தண்ணீர் என வழங்க பந்தல்கள் அமைக்கப் பெற்று விளங்கும்.மேல ரத வீதி, கீழ ரத வீதி, தெற்கு ரத வீதி, வடக்கு ரத வீதி என கோவிலின் நாற்புறமும் உள்ள ரத வீதிகளைக் கடந்து திரும்பவும் தேர் தன் நிலை வந்து அடையும் வரை தேரோட்டம் நடைபெறும். இந்துக் கோயில்களில் தேர் வீதியுலா வரும்போது, அதற்கு முன்னே நாதசுவரம், தவில் ஆகிய இசைக் கருவிகளை வாசித்துக்கொண்டு கலைஞர்கள் வருவர். கரகாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், காவடியாட்டம் போன்ற ஆட்டங்களும் நிகழ்வது உண்டு. தேருக்குப் பின்னே அடியார்கள் திருமுறைகளை இசையுடன் பாடி வருவது வழக்கம்.

மங்கல இசைக் குழு
நாதஸ்வர இன்னிசைச் செல்வன் N.K.ரகுராமன்

உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட தவில் மேதை
அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச்செல்வன்
N.K.Raguraman
Dresdener Str.6
50126 Bergheim
Germany
0049 2271 670236
Mob: 0049 157 89 15 95 71


ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயம்
பக்நாங் – யேர்மனி
அலங்கார உற்சவம்
24.06.2016 - 03.7.2016
Sulzbacher Str.56
71522 Backnang
Germany
திரு.மகேந்திரம்: 07191 3731436
0176 6185 47 64
திரு:மகாதேவா: 07041863966
திரு.ரூபன்:071563892


Saphiena Saree Textile

Öffnungszeiten
Monntag bis Samstag
11.00 uhr bis 19.00 uhr
புது அலங்காரச் சேலைகள், பாட்டிசாறிகள், சர்வார் மற்றும் குருதார், சிறுவர்களுக்கான ஆடைகள், bollywood Lenka அனைத்தும்
உங்கள் அழகை மேம்படுத்த நாடுங்கள்
Make up...Bridal, wedding and party
Tel: 020150727415 / 015231842652 / 015231842647
Steeler str 150 (hintereingang) 45139 Essen

எசன் மாநகரில்
ARASO PALACE
Orig.Srilankische & Indisch Küche
இலங்கை இந்திய உணவுகள்
சுடச்சுட மணம் குணம் குன்றாது
வழங்கின்றோம்.
ஒவ்வொரு சனிக்கிழமையும் ஊர்வாசத்தோடு கூழ்


Ecke Turm Str.10 45127 Essen Tel: 0201 227334



தன்னம்பிக்கையும் முயற்சியும் இருந்தால்

# சுவர் இல்லாமலும் சித்திரம் வரையலாம்.

05

சேவியர்

# உன்னை நீயே உருவாக்கு

வாழ்க்கையை எப்படி அணுக வேண்டும் என்பதை எப்போதுமே நமது மனம் தான் முடிவு செய்கிறது. சிலர் காலையில எழும்பும்போதே "என்னத்த எழுந்து.. என்னத்த கிழிச்சு.." என்று உற்சாகத்தை முழுமையாய் போர்வைக்கு அடியில் புதைத்து விட்டுத் தான் எழும்புவார்கள். அவர்களிடம் "எப்படி இருக்கீங்க ?" என்று கேட்டுப் பாருங்கள் "என்னத்த சொல்ல, ஏதோ வண்டி ஓடுது.." என்பார்கள்.

சிலர் அப்படியல்ல, காலையில் கண் விழிக்கும் போதே ஒரு புதிய நாளைத் தரிசிக்கப் போகிறோம் எனும் பூரிப்பில் எழும்புவார்கள். சூரியக் கதிர்கள் அவர்களுக்கு வரவேற்புக் கம்பளம் விரிப்பதாய் தோன்றும். அவர்களிடம் போய் "எப்படி இருக்கிறீங்க ?" என்று கேட்டால் "சூப்பரா இருக்கேங்க. எனக்கென்ன குறை ? வாழ்க்கை ரொம்ப அழகா இருக்கு" என்று புன்னகைப்பார்கள்.

இந்தகைய உற்சாக மனம் உடையவர்கள் தான் வாழ்க்கையில் நாம் சந்திக்கும் வெற்றியாளர்கள். அவர்கள் காலை முதல் மாலை வரை உற்சாகமாகவே இருப்பார்கள். எதையும் ஆனந்தமாய் அணுகுவார்கள். அன்றைய இரவு வரை அவர்களுக்கு வாழ்க்கை ஆனந்த நிகழ்வுகளையே கொடுத்துக் கொண்டிருக்கும். அவர்களுடைய இரவு செபம் கூட "ஆண்டவா, அழகான இந்த நாளுக்காக நன்றி" என்பதாகத் தான் இருக்கும்.

தன்னம்பிக்கை இல்லாதவர்களுக்கு உற்சாகம் வருவதில்லை. எப்படியோ ஒரு நாளை ஓட்டிட்டேன் என படுக்கையில் சரியும் அவர்களுடைய இரவு செபம் பெரும்பாலும் "ஆண்டவா, நாளைக்காவது நல்ல நாளா இருக்கட்டுமே" என்பதாகத் தான் இருக்கும்.

தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கான முதல் கட்டளை என்ன தெரியுமா ? நம்மை நாமே நேசிப்பது. அடுத்தவர்களை நேசிப்பதைப் பற்றி நமக்குத் தெரியும். பெரும்பாலான நேரத்தை அதற்காகத் தான் செலவிடுகிறோம். பெற்றோரை நேசிக்க, வாழ்க்கைத் துணையை நேசிக்க, பிள்ளைகளை நேசிக்க, நண்பர்களை நேசிக்க. இப்படியே ஓடிப் போகும் வாழ்க்கையில் நாம் நேசிக்க மறந்து போகும் ஒரு அப்பாவி நபர் யார் தெரியுமா ? சாட்சாத் நாமே தான் !

நம்மை நேசிப்பதற்கு முதல் தேவை நம்மை ஏற்றுக் கொள்வது. எப்படி இருக்கிறோமோ, அப்படியே ஏற்றுக் கொள்வது. கண்ணாடியில் காலையில் நம் முகத்தைப் பார்க்கும்போதே அந்த பிம்பம் நமக்கு உற்சாக மூட்டவேண்டும். நமது நிறம், தோற்றம், குரல், திறமைகள், இத்யாதிகள் எல்லாவற்றையும் அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டும்.

உங்கள் குழந்தை எந்த நிறமாக இருந்தாலும், எப்படி இருந்தாலும் கொஞ்சமும் தயக்கமில்லாமல் உற்சாகமாய் கட்டி அணைப்பீர்களல்லவா ? அந்த உற்சாகத்துடன், அதே ஆத்மார்த்தமாய் உங்களை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். தன் இயல்புகளோடு தன்னை ஏற்றுக் கொள்வது தன்னம்பிக்கைக்கான முக்கியத் தேவை.

பெரும்பாலும் தன்னம்பிக்கைக் குறையாடுகள் நான்கு காரணங்களால் வரலாம் என்கின்றனர் உளவியலார்கள். அடுத்தவர்கள் என்ன நினைப்பார்களோ எனும் பயம், ஒரு சூழலை எப்படிச் சமாளிக்கப் போகிறேன் எனும் பயம், மன அழுத்தம் மற்றும் எதிர்மறைச் சிந்தனைகள்.

இவற்றை எதிர்கொள்வதும், தன்னம்பிக்கை மனிதனாக துளிர் விடுவதும் கடினமான விஷயமல்ல. எத்தனை வேகமாய் தண்ணீர் ஓடினாலும் எதிரேறிச் செல்லும் சின்ன மீன்களைப் போல, உங்களைச் சுற்றி என்ன சூழல் ஓடினாலும் நீங்கள் எல்லாவற்றையும் கடந்து தன்னம்பிக்கை மனிதனாய் நிலை பெற முடியும். அதற்கு நிரூபிக்கப்பட்ட ஒரு சின்ன பயிற்சி உண்டு.

முதலில் உங்களுடைய சிறந்த பண்புகள் என்னென்ன என்பதை நீங்கள் பட்டியலிடுங்கள். உங்களுக்குத் தெரிந்த, நீங்களே மறந்து போயிருந்த பல விஷயங்கள் இந்தப் பட்டியலில் இடம் பெறும் !. பின்பு உங்கள் நெருங்கிய நண்பர்களிடம் "என்னிடம் உங்களுக்குப் பிடித்த விஷயம் என்ன ?" என்று கேளுங்கள். அவர்கள் சொல்வதையும் குறித்துக் கொள்ளுங்கள்.

எல்லோருக்கும் உங்களிடமிருக்கும் ஏதோ ஒரு விஷயம் பிடித்துப் போகலாம். இப்படிப் பட்டியலிடுகையில் உங்களுடைய வலுவான நல்ல விஷயங்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகும். "அட ! நானா இப்படி ?" என உங்களுக்கே ஒரு வியப்பு மேலிடும். உங்கள் தன்னம்பிக்கை முனை கூர்மையாகும்.

நேர்மறைச் சிந்தனைகளை அதிகரிப்பது ஒரு வகை. எதிர்மறைச் சிந்தனைகளை அழிப்பது ஒரு வகை. மனதில் எதிர் மறைச் சிந்தனைகள் அழிய அழிய, நேர் சிந்தனை மனதில் நிரம்பும்.

தொடர்ச்சி 17 ம் பக்கம்


AMMA's food
ammas-food.de
எங்கள் இனிய
தைப்பொங்கல்
நல் வாழ்த்துக்கள்
Amma's Food
Rheinische Straße 80A
44137 Dortmund
டோட்மூண்ட் நகரில் ...
அம்மா'ஸ் உணவகம்
அறுசுவைக்கறிகளுடன் சோறும், புறியாணியும்
கொத்து ரொட்டி ,இட்டலி , தோசை, வடை இடியப்பம்
இவற்றுடன் இன்னும் இன்னும் உங்கள் விருப்பறிந்து
தரக்காத்திருக்கின்றோம்!
உங்கள் இலத்தின் மங்கல வைபவங்கள் அனைத்திற்கும்
அம்மாவின் சமையலை நினைவூட்டும் உருசியுடன்
தயாரித்து பரிமாறுவோம்!
காலை 11.00 மணி முதல் மாலை 11.00 மணிவரை
செவ்வாய் கிழமை விடுமுறை!
அம்மாஸ் உணவகத்தின் சிறப்பு அம்சம்
சுவையைச் சுடச்சுடத் தருவதும் ஆகும்.



வெள்ளி சனி
நாட்களில் பாலப்பம்
Tel:0231 33 89 86 91
Fax:0231 33 89 86 93

## தன்னம்பிக்கைத் தொடர்...






தாமஸ் ஆல்வா எடிசன் மின் விளக்கு கண்டுபிடிக்க முயன்று கொண்டிருந்தபோது பல்பின் உள்ளே பயன்படுத்த வேண்டிய இழையை உருவாக்க பிரம்ம பிரயர்த்தனம் செய்தார். முடியவில்லை. ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்களை வைத்து அந்த இழையை முயன்றார். தோல்வியே மிஞ்சியது. அருகில் இருந்த உதவியாளர் நிக்கோலா டெஸ்லா சொன்னார், “சே... எல்லாமே வேஸ்டாகிப் போச்சு. ஒண்ணுமே உருப்படியா அமையவில்லை”.

எடிசன் அவனை உற்றுப் பார்த்து விட்டுச் சொன்னார், ”பத்தாயிரம் முயற்சிகள் தோல்வியடைந்தாலும் நான் சோர்ந்து போக மாட்டேன். ஏனென்றால் ஒவ்வொரு தோல்வியடைந்த முயற்சியும், சரியான பாதையில் ஒரு அடி முன்னே வைக்க நமக்கு உதவுகிறது”

இது தான் வெற்றியாளர்களுடைய பார்வை. எந்தத் தோல்வியும் தன்னம்பிக்கையுடைய மனிதனுக்கு எதிரே அணை கட்ட முடியாது. ஆறாம் வகுப்பில் படுதோல்வி அடைந்தவர் தானே உலகப் புகழ்பெற்ற சர் வின்ஸ்டன் சர்ச்சில் ! தோல்வி அவரை தன்னம்பிக்கையின் தேசத்திலிருந்து கடத்திச் சென்று விடவில்லை. அவருடைய தன்னம்பிக்கை அவரை வெற்றிகளின் சாம்ராஜ்யத்தில் உச்சத்தில் வைத்தது !

“உங்களால் மாற்ற முடியாத விஷயங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். மாற்ற வேண்டிய விஷயத்தை மாற்றுங்கள். இரண்டுக்குமிடையேயான வேறுபாடைக் கண்டறியும் ஞானம் பெற்றிருங்கள்.” இதுவே மகிழ்வான வாழ்க்கையின் அடிப்படை. தன்னம்பிக்கைக்கான வலுவான சிந்தனையாக இன்றும் போற்றப்படும் இது 1800களில் ரெயின்ஹோல்ட் என்பவரால் எழுதப்பட்டது.

சில விஷயங்கள் நம்மால் மாற்ற முடியாது. உதாரணமாக நீங்கள் குள்ளமாய் இருக்கிறீர்கள் என வைத்துக் கொள்ளுங்கள். அதை மாற்ற முடியாது. அதை ஏற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் ஏகப்பட்ட தம் அடிப்பீர்கள் என வைத்துக் கொள்ளுங்கள். அதை மாற்றியாக வேண்டும். ஏனெனில் அது மாற்ற முடிகிற விஷயம். இந்த இரண்டுக்குமான வித்தியாசம் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். !

இந்த வித்தியாசத்தைத் தெரிந்து கொள்ளாமல் குள்ளமாக இருப்பவர்கள் உயரமாக வேண்டுமென லேகியம் சாப்பிடுவதுண்டு. புகை பிடிப்பவர்கள் “தம்மெல்லாம் விட முடியாத பழக்கம்பா...” என சொல்லித் திரிவதுண்டு. இது இரண்டுமே தப்பான அணுகு முறை. ஏற்றுக் கொள்ள வேண்டியதை




ஏற்றுக் கொள், மாற்றிக் கொள்ள வேண்டியதை மாற்றிக் கொள். ஆனந்த வாழ்க்கையின் அடிப்படை இது.

நீங்கள் உங்களுக்குள்ளே நல்ல சிந்தனைகளை வளர்ப்பது ஒரு நிலை. உங்களைச் சுற்றி இருப்பவர்கள் நல்ல நேர் சிந்தனை உடையவர்களாக இருக்க வேண்டியது இன்னொரு நிலை. ஒரு நல்ல காமெடி படத்தைப் பார்த்து முடிக்கும் போது உங்கள் மனநிலை உற்சாகமாய் இருக்கிறது. ஒரு சோகமான படத்தைப் பார்த்து முடிக்கும் போது உங்கள் மனம் பாரமாய் இருக்கிறது இல்லையா ? இதே போல தான் உங்களைச் சுற்றியிருக்கும் நண்பர்களும் உங்களை மகிழ்ச்சியாகவோ, துயரமாகவோ வைத்திருக்க முடியும்.

“என்னய்யா வாழ்க்கை...?” , “என்னய்யா பொழப்பு இது...” என்றெல்லாம் வாழ்வில் பிடிப்பே இல்லாதவர்கள் உங்களைச் சுற்றியிருந்தால் உங்களுக்குள்ளும் அந்த சிந்தனை நிச்சயம் புகுந்து விடும். எனவே அப்படிப்பட்ட நண்பர்களை கொஞ்சம் விலக்கியே வைத்திருங்கள்.

சில நண்பர்கள் அதற்கு நேர் எதிராக இருப்பார்கள். அப்பப்போ மனசு கஷ்டமாயிருந்தா உங்களுக்கே ஒரு சில நண்பர்கள் தான் நினைவுக்கு வருவார்கள். சரிதானே ? அவர்களுக்குப் போன் பண்ணத் தோன்றும். அவர்களைப் போய்ப் பார்க்கத் தோன்றும். காரணம் அவர்களுடைய பாசிடிவ் அணுகு முறை.

அந்த நண்பர்களுடைய வார்த்தைகளுக்கு உங்களை சோர்வுச் சரிவிலிருந்து தூக்கி விடும் கைகள் இருக்கும். வைக்கோல் போரில் விழுந்த ஒரு துளி நெருப்பாக அவர்களுடைய வார்த்தைகள் உற்சாக நெருப்பைப் பற்ற வைக்கும். அப்படிப்பட்ட நண்பர்களோடு நெருக்கமாய் இருங்கள். தொடர்ந்து அவர்களோடு தொடர்பில் இருங்கள். அவர்களுடைய சுறு சுறுப்பு உங்களையும் பற்றிக் கொள்ளும்.
உன்னை உளமார நேசி
உயர்வு அதில்தானே யோசி !





Baufinanzierung / வீடு வாங்குவதற்க்கு தேவையான கடன்கள்:100% Free service
Umfinanzierung / வீடுக்கடனை எம்மிடம் மாற்றுதல் 100% Free service
Ratenkredit / தனிநபர் கடன் 100% Free service
Sonderfinanzierung / பலவிதமான கடன் வசதிகள்
Immobilien / வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Full Service / முழுமையான சேவை

நம்பிக்கை! உத்தரவாதம்!! 15 வருட அனுபவம்!!!
மேலதிகவிபரங்களிட்கு Tel. 05723-914519 or www.rklimmo.de
or www.lankasri.com



# பூமியைப்போல் மூன்று பூமியா? ஆமியும் எல்லைகளும் அங்கும் உண்டா?



மனிதவர்க்கத்தில் ஒருவரைப்போல் ஒருவர் உலகத்தில் இல்லை! ஒவ்வொருவருக்கும் தனியே ஒரு குணம் உண்டு, முகம் உண்டு! திரைப்படங்களில் மட்டும் உன்னைப்போல் ஒருவன், ஒருத்தி வந்து போகலாம்.

இப்போ உலகமும் தன்னைப் போல் மூவர்! அதாவது மூன்று கிரகங்கள் உள்ளதாக தம்பட்டம் அடிக்கத் தொடங்கிவிட்டது. ஆம் பூமியைப் போலவே மனிதர்கள் வாழத் தகுந்த மூன்று கிரகங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

நாம் வாழும் பரந்த பூமியில் எவ்வளவு இடம் இருந்தும் குந்த ஒரு நிலம் இல்லாமல் அலையும் போது? இன்னொரு பூமி எதற்கு? அகதிகளை அங்கு அனுப்பிவிட்டு பூமியைப் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தவா?

ஏதோ எதற்கோ இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகிறான் ஞானத்தங்கமே என்றபாடலை உள்வாங்கியபடி மீதியை வாசியுங்கள்.

பெல்ஜியத்தில் உள்ள லீகே பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வந்த ஆராய்ச்சியின் முடிவில் இது தெரிய வந்துள்ளது.

இது குறித்து அந்தப் பல்கலைக்கழகத்தின் விண்வெளித் துறை விஞ்ஞானி மைக்கேல் கிலோன் கூறியதாவது: உயிரினங்கள் வாழ்வதற்கு சாத்திய முள்ள வேதியியல் படிவங்கள் உள்ள ஒரு சிறு சூரிய குடும்பம் இருப் பதைக் கண்டுபிடித்துள்ளோம்.

நமது சூரிய குடும்பத்துக்கு வெளியே இதுபோன்ற வேதியியல் படிவங்கள் இருப்பது முதல் முறையாகத் தெரிய வந்துள்ளது.

39 ஒளியாண்டுகளுக்கு அப்பால் உள்ள ஒரு சிறு நட்சத்திரத்தை 3 கிரகங்கள் சுற்றி வருகின்றன. ஒளியாண்டு என்பது, ஓராண்டில் ஒளி பயணம் செய்யும் தொலைவான 6 லட்சம் கோடி கி.மீ. ஆகும். 39 ஒளியாண்டுத் தொலைவில் இந்த கிரகங்கள் அமைந்துள்ளன.

அந்த 3 கிரகங்களிலும் நமது பூமி, சுக்கிரன் (வீனஸ்) கிரகத்தைப் போன்ற அளவு, தட்ப வெப்பம் இருப்பதாகத் தெரிகிறது. இது மனிதர்கள் வசிப்பதற்கு ஏற்றவை எனக் கூற முடியும்.

அந்தக் கோள்கள் தமது தாய் நட்சத்திரமான 2MASS J23062928-0502285 என்ற நட்சத்திரத்தை வலம் வருகின்றன.

அவை அந்த நட்சத்திரத்திலிருந்து உயிர் வாழ்க்கைக்கு சாத்தியமான ஒளியை பெற்று வருவதாக நம்புவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அந்தக் கோள்களில் ஒன்று பூமியிலுள்ளதையொத்த தட்ப வெப்ப நிலையைக் கொண்டுள்ளதாக நம்பப்படுகிறது.

சிலி நாட்டில் அமைக்கப்பட்டுள்ள "டிராப்பிஸ்ட்" (TRAPPIST telescope ) தொலைநோக்கி வழியாக அந்த சிறு நட்சத்திரத்தையும் அதனைச் சுற்றி வரும் 3 கிரகங்களின் தோற்றத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும் பல மாதங்கள் விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர்.அதனைத் தொடர்ந்து, அவை மனிதர்கள் வாழத் தகுந்த கிரகங்கள் என முடிவுக்கு வந்தனர் என்றார் அவர்.இந்த ஆய்வு முடிவுகள் "தி நேச்சர்" ஆய்விதழில் வெளியாகியுள்ளது.-



## தொடரும் வாழ்வில்

"உன்னைக் கொடு
என்னைத் தருவேன்"
காதலிக்கையில்

"உன்னைக் கட்ட
என்ன தருவாய்"
கல்யாணத்தில்

"உன்னைக் கட்டி
என்ன கண்டேன்"
தொடரும் வாழ்வில்

**சந்திரவதனா –யேர்மனி**

## தாய்மனமும் சேய்மனமும்

சிறகிருக்கிறது
என்னைப் பறக்க விடு
என்பது பிள்ளை மனம்.

சிறு பிள்ளை நீ
என் இறகுக்குள் ஒளிந்து கொள்
என்பது பெற்ற மனம்.

புரியாமல் பறந்தோடும்
பிள்ளை மனம்
புரியும் போது
அதுவும் பெற்ற மனம்.


**Akchaya Digital Photography& Decoration**

*Weddings,Puberty ceremony.Reception,Birthday,Aranketam,Registration*

உங்கள் திருமணநாள் பிறந்தநாள்,மற்றும் ஏனைய நிகழ்வுகளுக்கும் மண்டபம் மணவறை சோடினை,நாதஸ்வரம் பூமாலைகள் கேக் சிற்றுண்டி குடிபானங்கள் உணவுவகைகள்,மேக்கப் வாகன ஒழுங்கு மற்றும் ஐயர், அனைத்து தேவைகளையும் செய்து தருகின்றோம்.

Contakt:E.Akilan. 02641 91 68 98 Mobi: 0163 39 40 474









# புலம் பெயர் வாழ்வில் திருமணமாகாத பெண்களின் எதிர்காலம்



சந்திரவதனா

புலம் பெயர் வாழ்வில் திருமணமான பெண்களின் எதிர்காலம் எப்படி அமையும் என்பதை முன்பு பார்த்திருந்தோம். இனி திருமணமாகாத பெண் பிள்ளைகளின் எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது என்பதைப் பார்ப்போம்.

திருமணமாகாத பெண்பிள்ளைகளின் எதிர்காலம் கூட பல்வேறு விதமாகவேதான் அமையப் போகிறது. பெற்றோர்களின் தன்மையைப் பொறுத்தே பிள்ளைகளின் நிகழ்காலம் நிர்ணயிக்கப் படுகிறது.

அனேகமான பெற்றோர் கட்டுப்படுத்தி வளர்ப்பது ஒன்றுதான் பிள்ளைகளை நன்னெறிப் படுத்தும் என்று எண்ணி பிள்ளைகளின் முற்போக்கான தன்மைக்கு முட்டுக்கட்டையாக நிற்கிறார்கள். இதனால் பிள்ளைகள் மிகவும் மன அழுத்தத்திற்கு ஆளாகிறார்கள். இப்படியான பெற்றோர்களின், பிள்ளைகளின் எதிர்காலம், எதிர்காலம் என்று சொல்வதை விட நிகழ்காலம் மிகவும் கடினமானதாகவே இருக்கும்.

இவர்களின் திறமைகள் மழுங்கடிக்கப் பட்டு எதிர்காலம் கூட இவர்களுக்குள் பயத்தை ஏற்படுத்தி, இயல்பாகவே இவர்களிடம் உள்ள தன்னம்பிக்கை குறுகடிக்கப் பட்டு விடும்.

ஆனாலும் இன்றைய திருமணமாகாத பெண்பிள்ளைகளின் எதிர்காலம், சில மோசமான கணவன்மாரிடம் அகப்பட்டுக் கொண்ட இன்றைய திருமணமான பெண்களின் எதிர்காலம் போல மோசமானதாக அமையாது என்று நம்பிக்கை கொள்ளலாம்.

. ஏனெனில் தற்போதைய பெரும்பாலான பெண்பிள்ளைகள் மிகவும் விழிப்புணர்ச்சியுடனும், எதையும் ஏன், எதற்கு என்று ஆராய்ந்து பார்க்கும் தன்மையுடனும், மிகுந்த தன்னம்பிக்கையுடனும் இருக்கிறார்கள். முந்தைய பெண்களைப் போல் கலாச்சாரம், பண்பாடு, சம்பிரதாயம் என்ற பெயரில் நடக்கும் போலிச் செயற்பாடுகளை ஏன் எதற்கு என்ற ஆராய்ச்சியில்லாமல்

ஏற்றுக்கொள்ளும் அறிவீலித்தனம் பெரும் பாலான இன்றைய பெண் பிள்ளைகளிடம் இல்லை. சம்பிரதாயப் போர்வைக்குள் தம்மை ஒழித்துக் கொள்ள இவர்கள் தயாராக இல்லை.

இருந்தும், பெரும்பாலான பெரியவர்கள் “இது தப்பு”என்றுதான் கருதுகிறார்கள். இதனால் பெரியவர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையே பல்வேறு கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றன.

இதே நேரம் பல பெற்றோர் பிள்ளைகளின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களுடன் நட்பாகப் பழகி அவர்கள் போக்கிலேயே சென்று அவர்களை நன்நெறிப் படுத்துகிறார்கள்.

இப்படி வளர்க்கப் பட்ட பிள்ளைகள் எதிர்காலத்தைப் பற்றிய ஒரு நம்பிக்கையும் மனத்தெளிவும் கொணடுள்ளார்கள்.

இவர்களின் எதிர்காலம் நிட்சயம் பிரகாசமானதாய் அமையும் என்று நம்பிக்கை கொள்ளலாம்.

அளவுக்கதிகமான கட்டுப்பாட்டுக்குள் வளரும் பிள்ளைகளை விட அன்பாக வளர்க்கப் படும் பிள்ளைகள் மிகவும் தெளிவான மனநிலையுடனும், வாழ்க்கை மீது பற்றும், நம்பிக்கையும் கொண்டவர்களாகவும் உள்ளார்கள். இதைப் பெற்றோர்கள் புரிந்து கொண்டால் பல பிரச்சனைகள் தீர்ந்து விடும்.

அத்தோடு இன்றைய ஆண்பிள்ளைகள் அதாவது இங்கு வளர்பவர்கள், முந்தைய ஆண்கள் போல நான் ஆண் என்ற திமிர்த்தனம் இல்லாமல் பெண்களுடன் பழகத் தொடங்கியுள்ளார்கள்.

இது கூட புலம்பெயர் வாழ்வில் பெண்களின் எதிர்காலம் அடிமைத்தனத்துக்குள் அடங்கிப் போகாதிருக்க அத்திவாரமாகிறது.

நான் நம்புகிறேன், புலம் பெயர் மண்ணில் இன்று வளர்ந்து கொண்டிருக்கும் பெண்கள் சமூகத்தின் எதிர்காலம் ஓரளவுக்கேனும் ஆரோக்கியமானதாகவும், அழகியதாகவும், வாழ்வை வாழ்வாக அனுபவிக்கும் தன்மை கொண்டதாகவும் அமையும் என்று.




# நான் தலைவன் அல்ல. தலைவன் என்ற பெயரில் மக்களின் அடிமை நான்!



M.G.R. எப்போதும் மக்களோடு மக்களாகவே இருந்தார். தமிழகத்தின் முதல்வர் என்ற உயர்ந்த பதவியில் இருந்தபோதும் தன்னை மக்களிடமிருந்து அப்பாற்பட்டவராக அவர் நினைத்ததோ, செயல்பட்டதோ இல்லை.



மக்கள் திலகம்

எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்த சமயம். பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாள் விழா. முதல்வர் என்ற முறையில் அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதற்காக, சென்னை மாம்பலத்தில், இப்போது நினைவு இல்லமாக உள்ள தனது அலுவலகத்தில் இருந்து காரில் புறப்பட்டார். அண்ணா மேம்பாலம் அருகே கார் சென்று கொண்டிருந்தபோது, திடீரென டிரைவர் கதிரேசனை காரை நிறுத்தும்படி எம்.ஜி.ஆர். பதற்றத்துடன் கூறினார். அவரும் உடனடியாக காரை நிறுத்தி விட்டார். முதல்வருடன் வந்த வாகனங்களும் நின்றுவிட்டன.

காரை விட்டு இறங்கிய எம்.ஜி.ஆர். ஓட்டமும் நடையுமாக சென்றார். என்னவென்று புரியாமல் அதிகாரிகளும் உதவியாளர்களும் அவரை வேகமாகப் பின்தொடர்ந்தனர். சாலையில் காரை நிறுத்தி எம்.ஜி.ஆர். இறங்கிச் செல்வதைப் பார்த்ததும் ஆங்காங்கே வாகனங்களில் சென்றவர்களும் வாகனத்தை நிறுத்திவிட்டனர். பொதுமக்களும் கூடியதால் அந்த இடமே பரபரப்பானது. அடுத்த சில விநாடிகளில் எம்.ஜி.ஆர். எதற்காக அப்படி வேகமாக சென்றார் என்பது எல்லோருக்கும் தெரிந்துவிட்டது.

சாலையோரத்துக்கு எம்.ஜி.ஆர். வேகமாக சென்றார். அங்கு காக்காய் வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டு கை,கால்களை உதறியபடி வாயில் நுரைதள்ள ஒருவர் போராடிக் கொண் டிருந்தார். அந்த நபரை மடியில் கிடத்திக் கொண்ட எம்.ஜி.ஆர்., அவரது கையை நீவிவிட்டு ஆசுவாசப்படுத்தினார். சற்று துடிப்பு அடங்கிய நிலையில், தனது உதவியாளர்களை அழைத்தார். அந்த நபரை ராயப்பேட்டை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யுமாறு கூறிவிட்டு பின்னர், காரில் ஏறி புறப்பட்டார். சென்னை அண்ணா சாலையில் பரபரப்பு மிகுந்த காலை நேரத்தில் ஏராள மானோர் செல்கின்றனர். அவர்கள் யாருமே வலிப்பு நோயால் துடிக்கும் நபரை கண்டு கொள்ளவில்லை. ஆனால், ஒரு மனிதன் துடிப் பதை பொறுக்காமல் முதல்வரே காரில் இருந்து இறங்கி வந்து அவரை ஆசுவாசப்படுத்தியதுடன் அவருக்கு சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்த மனிதநேயத்தை நேரில் பார்த்த ஆயிரக் கணக்கானோர் வியந்தனர்.

எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது ஒரு விழாவில் கலந்து கொள்வதற்காக மதுரை வந்தார். தெற்குமாசி வீதி மேலமாசி வீதி சந்திப்பில் மேடை அமைக்கப்பட்டிருந்தது. பெண்கள் உட்பட சிலர், மேடையில் இருந்த எம்.ஜி.ஆரை பார்ப்பதற்காக கையில் மனுக்களு டன் ஓரமாக நின்றனர். காவல்துறையினர் அவர் களை போகச் சொல்லியும் மறுத்தனர். "மனுக் களை எங்களிடம் கொடுங்கள். முதல்வரிடம் நாங்கள் கொடுத்துவிடுகிறோம்" என்று போலீஸாரும் அதிகாரிகளும் சொன்னாலும் அவர்கள் கேட்பதாக இல்லை. "எம்.ஜி.ஆரிடம் தான் கொடுப்போம்" என்று உறுதியாகக் கூறினர். மேடைக்கு கீழே ஓரமாக நடந்த இந்த சலசலப்பை எம்.ஜி.ஆர். கவனித்துவிட்டார். அதிகாரிகளிடம் விவரம் கேட்டார். "உங்களிடம் தான் மனு கொடுப்போம் என்று கூறுகின்றனர்" என்று அதிகாரிகள் தெரிவித்தனர். அடுத்த கனமே சற்றும் தயங்காமல், "அதனால் என்ன? அவர்கள் விருப்பப்படி நானே வாங்கிக் கொள்கிறேன்" என்று சொன்ன எம்.ஜி.ஆர்., யாரும் எதிர்பாராத வகையில், ஐந்து அடிக்கு மேல் உயரமாக இருந்த மேடையில் அமைக் கப்பட்டிருந்த தடுப்பை கண்ணிமைக்கும் நேரத்தில் தாண்டினார். தடுப்புக் கம்பியை ஒரு கையால் பிடித்தபடி, குறுகலான மேடையின் நுனியில் குத்திட்டு அமர்ந்தபடி மக்களிடம் இருந்து மனுக்களை குனிந்து பெற்றுக் கொண்டார்.

மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து, அதற்காக மேடையில் தடுப்புக் கம்பியை தாண்டி வந்து மனுக்களை எம்.ஜி.ஆர். பெற்றுக் கொண் டதைப் பார்த்த பொதுமக்கள் 'புரட்சித் தலைவர் வாழ்க' என்று உற்சாகமாக கோஷம் எழுப்பினர் மனுக்கள் கொடுத்தவர்கள் உட்பட.

'படகோட்டி' படத்தில் ஒரு காட்சி. இரு மீனவ குப்பங்களுக்கிடையே பகை நிலவும். ஒரு குப்பத்தின் தலைவரான எம்.ஜி.ஆரும் எதிரி குப்பத்தைச் சேர்ந்த தலைவரின் மகளான நடிகை சரோஜா தேவியும் காதலிப்பார்கள். இதற்கு எம்.ஜி.ஆரின் குப்பத்து மக்கள் எதிர்ப்பு தெரிவிப்பார்கள். அவர்கள் விருப்பப்படி தனது காதலை தியாகம் செய்ய எம்.ஜி.ஆர். முடிவு செய்வார். அதனால் வருத்தப்படும் சரோஜா தேவி, "எனது காதல் கருக வேண்டியதுதானா?" என்று கேட் பார். அதற்கு எம்.ஜி.ஆர். இப்படி பதிலளிப்பார்...

"நான் தனிமனிதனல்ல. மக்களுக்கு கட்டுப் பட்டவன். நான் தலைவன் அல்ல. தலைவன் என்ற பெயரில் மக்களின் அடிமை நான்."

அப்படி, மக்களின் அடிமையாக தன்னைக் கருதி சேவை செய்ததால்தான் எம்.ஜி.ஆர். 'மக்கள் திலகம்'!








# மீண்டும் ஒரு மீள் சுழற்ச்சி







மனித உடலில் மார்பெலும்புடன் சேர்த்து 208 எலும்புகள் உள்ளன. இதில் அதிசயம் என்னவென்றால் 270 எலும்புகளுடன் பிறக்கும் குழந்தை, வளரவளர சில எலும்புகள் ஒன்றுடன் ஒன்று இணைவதன் மூலம் 208 ஆக மாறுகின்றது. இதில் இன்னுமொரு சுவாரசியம் என்னவென்றால் காதுக்குள்ளும் மூன்று நுண்ணிய எலும்புகள் உள்ளன இவையே எமது செவிப் புலனின் தன்மையை மேம்படுத்துகின்றன. சத்தத்தின் அதிர்வுகளை இவ்வெலும்புகளின் துணையுடன் நரம்புகள் மூலம் மூளைக்குக் கடத்தும் தொழிநுட்பத்தை கண்டறிந்த மனிதன் ஒலியை அதிர்வாக்கி அதனை மின்சாரமாக்கி மின்சாரத்தை இலத்திரனியல்த் தட்டுக்களில் சேகரிக்கும் தொழில்நுட்பத்தை விரிவுபடுத்தினான். பாதத்தின் எலும்புகள் ஏன் பாதி வளைந்துள்ளது என்று ஆராய்ந்த மனிதன், உறுதியான பலத்தை உருவாக்க, பாலங்கள் வளைந்த வடிவில் வடிவமைக்கவேண்டும் என்று அறிந்துகொண்டான். காலில் உள்ள பந்துக் கிண்ண மூட்டு மற்றும், கையில் உள்ள இணை மூட்டு என்பவற்று உற்று நோக்கி, பிரமாண்ட பாரம்தூக்கிகளை வடிவமைத்தான். இவ்வாறு விஞ்ஞானிகளின் ஒவ்வொரு கண்டு பிடிப்பையும் சாதாரண மனிதனின் பார்வையில் உற்று நோக்கினால், மனிதனின் உடலமைப்பை கொண்டே அனைத்துத் தொழில் நுட்பமும் இயங்குகின்றது என்பதை அறிந்து கொள்ளலாம்.

இன்றைய கண்ணிமைக்கும் கணப் பொழுதில் கதிகலங்கும் மாற்றத்தை ஏற்படுத்தும் அதிசய தொழில்நுட்பம் அனைத்தும், சாதாரண அடிப்படை விஞ்ஞானத்தில் இருந்து விரிவு படுத்தப் பட்டமையே ஆகும். உதாரணத் திற்கு விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் பெரிய செங்கல் அளவு கண்டு பிடிக்கப் பட்ட கைத் தொலைபேசி வெறும் காதுத் துவாரத்துக்குள்ளேயே அடங்கும் வண்ணம் சுருங்கியமையும், சிறிய உரசலில் வரும் தீப்பொறி பிரமாண்ட அழிவை ஏற்படுத்தும் அணுகுண்டளவு மாறியமைக்கும் விஞ்ஞான அடிப்படை ஒன்று தான் அதன் விரிவாக்கம் விளைவில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தி 2016 இல் இத்தனை வேகமான உலகை உருவாக்கி உள்ளது.

மனிதனின் இத்தனை கண்டு பிடிப்பும் இத்தனை வேகமும் இந்த உலகிற்கு ஒன்றும் புதிதானதில்லை என்பது மண்ணினுள்ளும், மாபெரும் சமுத்திரங் களுள்ளும் உறங்கிக் கொண்டிருக்கும் பண்டைய கால சரித்திரங்கள் சொல்கின்றன. இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால், இன்றைய காலத் தொழில்நுட்பங்கள் அழிவை உருவாக்குவதில் கண்ட அதீத வளர்ச்சி, ஆக்கப் பொருளில் காணவில்லை என்று தான் சொல்லவேண்டும். இன்றைய தொழில் நுட்பத்திற்கே சவாலாக இருக்கும் எகிப்தின் பிரமீட்டுகள், ஏன் எம்மவரின் தஞ்சைக் கோவில் கூட விஞ்ஞானம் கண்டு வியக்கும் ஒரு அரிய பொருள் தான். விண்வெளியில் இருந்து பார்த்தால் மட்டும் தெரியக் கூடிய பிரமாண்ட ஓவியங்கள், என்று பண்டைய மக்களின் படைப்புக்களைப் பற்றி ஆராயப் போனால், எம்மவரின் இன்றைய தொழிநுட்பம், ஆரம்ப வகுப்பு மாணவர்களின் விளையாட்டு என்று கூறுமளவு பிரமாண்டமான அறி வாற்றலுடன் இருந்துள்ளது என்பது தெரியவரும்.



அவ்வாறு பிரமாண்ட அறிவாற்றலுடன் விளங்கிய ஆதிகால மக்களிற்கு என்ன நடந்தது எவ்வாறு அழிவு வந்தது என்று சிந்திக்க வைக்கின்றது. அத்தனை சிறப்புக் கொண்ட அவர்களாலேயே சமாளிக்க முடியாத அந்த அழிவை நாம் எவ்வாறு சமாளிக்கப் போகின்றோம் என்று ஒரு கணம் சிந்திக்கும் பொது சிந்தனை எல்லை சூனியம் ஆகின்றது.



வானத்தில் இருந்து தேவரும் அசுரர்களும் வந்தார்கள் என்ற செவிவழிக் கதைகள் வேற்றுக் கிரகவாசிகள் பற்றி தொட்டுச் செல்வதால், அழிவிற்கு அவர்கள் தான் காரணமோ என்றும் சிந்திக்கத் தூண்டுகின்றது. பிற கிரக வாசிகளுடன் தான் போரிட வேண்டும் என்றால், இனம் மொழி மதம் மறந்து பூமி என்று எண்ணம் கொண்டு ஒரு படையாகத் திரண்டு போரிடும் காலம் வரும். 20,48 மில்லியன் மக்கள் தொகை கொண்ட இலங்கையே ஒன்று சேர்ந்து இணைய முடியாத தருணத்தில் 7,40 பில்லியன் மக்கள் ஒன்றிணைந்து போரிடும் தருணம் வரும். அத்தருணம் வரும் போது இன்றைய கால மனிதனின் அழிவுக்கான கண்டு பிடிப்புக்கள் உதவலாம். ஆனால் அழிவு உலகின் மீள் சுழற்சியாக இருப்பின் மனிதனால் எதிர்த்துக் கூட போரிட முடியாத கவலைக்குரிய நிலையில் முழ்கும் சூழ்நிலை ஏற்படும்.

தொடர்ச்சி 22ம் பக்கம்


Adhaven Beauty Palar
E-mail: b.pirathini@gmail.com





Eyebrow threading
புருவம் திருத்தம்செய்தல்
Bridal make up
மணப்பெண் அலங்காரம்
Facials
முகப்பொலிவு
Hairstyle
சிகை அலங்காரம்
pimples threadment
முகப்பருசிகிட்சை

சேலை
கட்டபழக்கப்படும்
பூமாலை
கட்டிக்
கொடுக்கப்படும்
*Aleo vera Facial 25Euro*
*Gold Facial 34Euro*
*Saffron Facial 34Euro*
*Chat Conversation End*

Tel. 0176 72787821
0234 3258759

புதிய முகவரி: 1.OG
Brückstr.20-26
44135 Dortmund



RISING SUN
HOTEL • RESTAURANT • BAR
Rooms from
£ 39
www.risingsunhotels.com



லண்டனில் தங்க இடமும், இலங்கை உணவும், கொண்ட இனிய நம்மவர் விடுதி!

**Rising Sun Hotel & Restaurant**

அறைகள் யாவும் நவீன வசதிகளுடன் அமைந்துள்ளது.
இவற்றுடன் காலை ,மதிய, இரவு உணவு வசதிகளும் சிறப்பாக உண்டு

En-Suite Rooms ,Restaurant & Bar facilities available
to make your stay comfortable.

Free Wi-Fi & Car Park

admin@risingsunhotels.com

138, Greenford Road
Sudbury Hill
Harrow
Middlesex HA1 3QL
U.K
Tel: +44 208 4222 575

Sudbury Hill Station இல் இருந்து இரு நிமிட நடைத்தூரத்தில் !
Heathrow Airport இல் இருந்து 30 நிடங்களில் எம்மை வந்தடைய நேரடி Train வசதி உண்டு



21 ம் பக்கத் தொடர்ச்சி...


**மீண்டும் ஒரு மீள் சுழற்ச்சி**

அதாவது உலகின் மீள் சுழற்ச்சி என்பது என்னவெனில் உலகில் அனைத்திற்கும் ஒரு கணக்கு உண்டு. உதாரணமாக மனிதனின் உயிர் வாயுவிற்கும் மனிதனால் வெளிவிடப்படும் காபனீர் ஒட்சைட்டுக்கும் கூட அளவு நிலைகள் உண்டு. அந்த அளவு நிலைகளில் வேறு பாடு ஏற்ப்படும் போது பூமியின் தட்ப வெப்பம் மாறு படுகின்றன. அவ்வாறு மாறு படும் தட்ப வெப்பத்தை மீண்டும் சாதாரண நிலைக்குக் கொண்டுவர மீள் சுழற்ச்சியில் உட்படுகின்றது பூமி. மனிதன் மனிதனைப் பார்த்து படைத்த தொழிநுட்பம் அனைத்தும் மனிதனைப் போன்று உயிர்வாயுவை உள்ளெடுத்து கபில வாயுவை வெளிவிட இயற்கையின் சமநிலை குலையத் தொடங்கியுள்ளது. மனிதனின் உடல் உண்ட உணவை சேமித்து செமிக்க வைத்து சக்தியாகவும் மிகுதியை சக்கையாகவும் பிரிக்கின்றது. இதில் ஏதேனும் குழப்பம் ஏற்படும் போது உடல் சோர்வடைந்து முழுப் பலத்தையும் நோய்க்கு எதிராகப் பயன்படுத்தி உடலைச் சரி செய்யும் வரை மனித உடல் சோர்விலேயே இருப்பது போல். பூமியும் புலன் இழந்து இருக்கும். உயிர்களையும்இ அதன் நலனையும் கவனிப்பதை விடுத்து, தன் தட்ப்ப வெப்ப நிலைக்கு எதிராக தன்னை மாற்ற முயலும், அதன் விளைவாக பலத்த சுனாமி, புயல், பூகம்பம் என்று அனைத்தையும் கொண்டு பூமியை புதுப்பிக்கும் மீண்டும் புதுப்பித்து அதில் புதுவித ஆரம்பத்தை உண்டாக்கும்.

அவ்வாறு பூமியே தன்னைத் தானே புதுப்பிக்க ஆரம்பித்து விட்டால் நம் உயிர்வாழ்க்கை சந்தேகம் தான் ஆகவே அதற்கான பரிகாரத்தைத் தேட வேண்டும். அப்படிப் பார்க்கப் போனால் இரண்டு பரிகாரம் உள்ளது. ஒன்று பூமி தவிர்ந்து இன்னோர் கிரகம் மனிதன் வாழக் கூடிய ஏற்பாடுடன் கூடியவகையில் ஏற்படுத்தி அங்கு குடிபுகவேண்டும். இல்லையெனில் பூமி தன்னைத் தானே மீள் சுழற்ச்சி செய்ய முதல் நாமே அதற்கான ஏற்பாட்டை ஆரம்பிக்க வேண்டும்.

இக்கரைக்கு அக்கரை பச்சை
இயற்கையுடன் இணைந்தால் இக்கரையே பச்சை.

## பால்க்கார வேடத்தில் வந்தும் பணம் கொடுக்கலாம்!,




தமிழக சட்டமன்றத் தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதை தடுக்க தமிழகம் முழுவதும் நடந்திய சோதனையில் இதுவரை ரூ.600 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. கடந்த மே மாதம் 4ம் தேதி முதல் தேர்தல் அதிகாரிகள், பறக்கும் படையினர் உதவியுடன் வாகன சோதனையில் ஈடுபட்டு வந்தனர். மாறுவேடத்தில் வந்தும் பணம் கொடுக்கலாம்! தேர்தல் அதிகாரிகளின் கண்களில் மண்ணை தூவி விட்டு ஓட்டுக்கு நோட்டை கொடுத்து விடுவார்களா? அல்லது பால்காரர், பேப்பர்காரர் வடிவில் டோக்கன்களை போடுவார்களா? என்ற எதிர்பார்ப்பு எழுந்தது. ஓட்டுக்கு பணமோ, பொருளோ, டோக்கனோ கொடுத்தால் உடனே கைது செய்யப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டு இருந்தது. இருந்தும் பணம் பத்தும் செய்யுமே!

## வருங்காலத் திருடன்!

ஏ.ஆர்.முருகதாஸ்

**இது படத்தின் தலைப்பு அல்ல...**

சென்னை: ஓட்டுப்போட பணம் கொடுப்பவன் வருங்கால திருடன் என இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ் தெரிவித் திருக்கிறார். இது படத்தின் தலைப்பு அல்ல! தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலையொட்டி தேர்தல் தொடர்பான பிரச்சாரங்கள் சூடு பிடித்த வேளை. பணப்பட்டு வாடாவைத் தடுக்க தேர்தல் ஆணையம் பல்வேறு முயற்சிகளில் இறங்கியது.
மேலும் 100% வாக்குப்பதிவிற்காக விழிப்புணர்வு விளம்பரங் களையும் வெளியிட்டு வந்தனர். இந்நிலையில் ஓட்டுக்கு பணம் வாங்குவதற்கு தமிழின் முன்னணி இயக்குநர்களில் ஒருவரான ஏ.ஆர்.முருகதாஸ் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.. ஓட்டுக்கு பணம் கொடுக்கும்போது அடையாளம் கொள்க, அவன் வருங்கால திருடன் என்று” என கூறியிருந்தார்.

# ஊரின் உயிர்த் துடிப்பு இவர்கள்!





தாயகம் செல்வோரை அங்கு, தாய் அகத்தில் வரவேற்பாள். பாச மழைபொழிவாள். இது பலருக்கு கிடைக்கும் பெரும் பேறு.
தாயகத்தில் தாய் தந்தையர் இல்லாதவர்களுக்கு, தாயாக நின்று நம் முகம் மலரவைப்பவர்கள் அங்கு வாழும் மக்களும். கடைகளும்தான்.
கடைகள் என்றால் பெரும் சுப்மாக்கற் என்று பொருள் இல்லை. நமக்குத் தேவையானவற்றை உணர்ந்து உண்மைபேசி எமக்கு பொருட்களை விற்பவர்கள். குறிப்பாக வெளிநாடுகளில் இருந்து வந்திருக்கிறோம் என்று அறிந்து கொண்டால் அவர்கள் எம்முடன் பழகும் விதமே இதமானது. அதுதான் முன்பே குறிப்பிட்டது தாயகத்தின் தாய் இவர்கள்.

மாம்பழம் சரி இல்லை என்றால் இது சரியிலை, நீங்கள் நல்லது யாவும் முடிந்துவிட்டது. அங்கு சென்று அந்தக் கடையில் இருக்கும் வாங்குங்கள், அங்கும் இல்லை என்றால் காலையில் வாருங்கள் என்று சொல்வார்கள்.





தனது கடையில் இல்லை என்று, இன்னுமொரு கடையை காட்டும் மனம் வேறு எங்கு காணலாம். பல நாட்களின் பின் இங்கு வந்து உள்ளீர்கள், பலாப்பழம் இது எங்கள் வீட்டுப்பழம். நல்லது என்று சொல்லிச் சொல்லி, நம்மையும் தம்வீட்டுப்பிள்ளைகளாக்கி மகிழும் அந்த சிறு சிறு மரக்கறி வியாபாரிகளையும், பழவியாபாரிகளையும், வியாபரிகள் என்று சொல்வதா பாரி என்று கொள்வதா!
எத்தனை நாடுகளுக்கு விடுமுறைக்குச் சென்றிருப்போம். அங்கு எல்லாம் உலாசப்பயணிகள் என்று எம்மிடம் எப்படி வியாபாரம் செய்யலாம் என்று எண்ணும் அந்த விழிகளைத்தான் பார்த்திருப்போம். இங்கு நாம் கண்ட அன்பு விழிகள் எம் விழித்திரையில் நிரந்தரமாகப் பதிந்தேவிட்டன.
எப்படி அம்மா இருக்கின்றீர்கள், எப்படி தம்பி கடைபோகிறது. ஐயா கனகாலமாக கடைவைத் திருக்கின்றீர்களோ என்று நாமும் உற்றவராய் நின்று கேட்டால், நம்மைப்பெற்றவர்களின் சாயல் அவர்களது பதிலில் இருக்கும்.

25 வருடங்களுக்கு மேலாக பழக்கடை மரக்கறிக்கடை வைத்து வாழும் அம்மாக்கள் நம் கண்களில் நிறைந்து நிற்கின்றார்கள். தாய்மண்ணில் அந்த 25 வருடத்தில் என்ன என்ன சோதனைகளை எல்லாம் தாங்கியவர்கள்.அந்த வலியை மறைத்துக்கொண்டு எப்படி புன்னகையுடன் எம்முடன் உரையாடு கின்றார்கள் என்று ஒரு கணம் எண்ண வைக்கும்.
பலரது வாழ்வில் பல சோதனைகள் அரங்கேறி மனதுள் உறைந்து போயிருக்கும். அவர்களிடம் நேரடியாகவே எப்படி பல வேதனை களைத்தாங்கி சிரிக்கமுடிகிறது என்று கேட்டால், அவர்கள் சொன்னபதில். சோகங்கள் எம்முடன் இருக்கட்டும், வருபவர்கள் மனதில் மகிழ்வு பொங்கட்டும். எங்கள் கவலையைக்கூறி அவர்களைச் சங்கடத்தில் ஆழ்த்த நாம், கடைவிரிக்கவில்லை. எங்கள் சிரிப்பிலும் உபசரிப்பிலும் அவர்கள் தேவையானதை பெறும், மகிழ்விலும்தான், நாம் தினமும் கடையைத் திறக்கின்றோம். ஊரில் எந்தக்கடையிலும் விலைதான் கேட்கமுடிகிறது. பேரம் பேச முடியவில்லை. ஏன் என்றால் வாங்கு வது பிள்ளை. விற்பது தாய். இதற்குமேல் ஊரின் உயிர்த் துடிப்பை எங்கு நாம் நாடி பிடிப்பது. எங்கள் நாடித்துடிப்பே ஊர்தான்.படங்களும் உறவுகளின் உணர்வுகளும், வெற்றிமணிக்கு பகிர்ந்தவர்கள்.

**யோ.சாந்தி-லண்டன்.**




## கதை கதையாம் காரணமாம்

**கே.எஸ்.சுதாகர்**

### அதுவே மகிழ்ச்சி! அதுவே இன்பம்.

சந்திரனும் மனைவியும் ஓய்வின்றி
சதா வேலைக்குப் போவார்கள்.
ஒருமுறை சந்திரனின் பெற்றோர்கள்
வெளிநாட்டுக்கு வந்தார்கள். அவர்களுக்கு
வீட்டுக்குள்ளேயே இருந்து போரடித்தது.
"சந்திரன்... எங்கையாவது வெளியிலை கூட்டிப் போப்பா."
சந்திரன் அவர்களை ஷொப்பிங் கூட்டிச் சென்றான்.
"நீங்கள் கடைக்குப் போய்விட்டு வாருங்கள்.
நாங்கள் இந்த வாங்கிலை இருக்கிறம்" என்றார்கள் பெற்றோர்.
ஷொப்பிங் முடித்து திரும்புகையில் சந்திரனிற்கு அதிர்ச்சி.
பெற்றோர், இரண்டு முதியவர்களுடன்
தமிழில் பேசி சிரித்துக் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

உங்களுக்காக எம்மிடம்...!
200 பேர் வரை அமரக்கூடிய அழகிய மண்டபம்
மேடை, மேசை அலங்காரம் மற்றும் புதிய ரக மணவறைகள்
புகைப்பட மற்றும் வீடியோ படப்பிடிப்புக்கள்
உணவு மற்றும் பலகார வகைகள்
மணப்பெண் அலங்காரங்கள்
போக்குவரத்துக்கான சொகுசு வாகனங்கள்
கேக் வடிவமைப்புக்கள்
DJ, Karaoke இசை அமைப்புக்கள்



திருமண வைபமா? பூப்புனித நீராட்டு விழாவா?
பிறந்தநாள் கொண்டாட்டங்களா?
மற்றும் ஏனைய வைபவங்களுக்கும்
இன்றே அழையுங்கள்..!



akShaya

தொடர்புகளுக்கு :
01722947572, 01628031647, 01776794261
E-Mail:suresh.rasiah@icloud.com

## Thushi -Deko


உங்கள் தெரிவுகள் அனைத்தும் எங்கள் கையிருப்பில்.....

Christal mandapa Set round
Rada Krishna Stage
and Raja Gopuram






Elephant Stage



Thushiyanthan.
Thiruselvam

Tel:02305 - 85945 - 0176 608 108 13








## திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி





சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450



உங்கள் தாய் மொழியில்....

## HK Hammacher

வாகனச் சாரதி பயிற்சி நிலையம்



ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி மொழிகளில் வகுப்புக்கள் உண்டு. பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.

தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651

MPU
ASF
ASP

இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!






உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?
உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.



Thuvaragan Nesapalan
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal

rmb
Gothaer



IG வது ஆண்டு நிறைவான சேவை

## Kaneen Electronics

Internet-sat,
Receiver,Camera-Alam
கருவிகள் மலிவு விலையில்
பெற்று பயனடையுங்கள்

சகல **Alarmanlage, Überwachung Kamera,Sat-Tv, IP-TV, Internet,** பொருத்துதல், பழுதுபார்த்தல் சகல வேலைகளுக்கும். 2016 Januarry; புதிய சட்டத்திற்கமைய உங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்களுக்கு தீ அபாய அறிவிப்பு Alarm கருவிகளை சட்டபூர்வமாக அனுமதி பெற்றவர்கள் மூலம் பொருத்துவதற்கும், உங்கள் வீடுகளில் நடைபெறும் சகல மங்கள நிகழ்வுகளையும் மிகத்துல்லியமான தொழில்நுட்பமுறையில் Video ஒளிப்பதிவு செய்வதற்கும், Sattelte மூலம் நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கும் இன்றே நாடுங்கள்

Tel: 02053 423 740 Fax: 2053 423 741 -Mobil: 0172 2931266
info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de

Schevenhoferweg-24
42111 Wuppertal



## Nirubagini Magendiran LL.M.

Vereidigte Dolmetscherin und Übersetzerin

Tamil- Deutsch
Deutsch- Tamil

மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன் – தமிழ்

Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com



Nimal HD
Film Style Cinematography
nimalvideo@gmail.com

Videography | Photography | Graphic Designing
Video Editing | Photo Album Making
3D Logo Creating | 3D Logo Annimation
Web Development | Add film | Visual fx
Event entertainment

தொடர்புகளுக்கு: கபிலன்
Tel: 0152 33 83 29 55
01776 794 261



உங்கள் இல்லத்தில் நிகழும் மங்கல நிகழ்வுகள் கலை விழாக்கள
மனதோடு நிற்க ஒளிப்பதிவு செய்து தரப்படும்!
45 நாட்களில் கிடைக்கும்!



## புனித யாத்திரை



தொடர்புகளுக்கு:ஒழுங்கமைப்பாளர் Noman

## லூட்ஸ் மாதா– போத்துக்கல் பார்த்திமா

24.07.2016 - 01.08.2016
( 9 தினங்கள்)

Bielefed- Herene- Paris , இல் இருந்து பயணத்தில் இணையலாம்.
லூட்ஸ்மாத போத்துக்கல் பார்த்திமா - ஸ்பெயின் யாகப்பர் கல்லறை இவற்றைப் பார்வையிடலாம். உணவு, தங்குமிடவசதி அனைத்தும் உள்ளடக்கிய புனிதப் பயணம்.

Tel: 0157 709 880 72
Tel: 0521 399 3855




புனிதமானப் பரதக் கலையினை புலம்பெயர் நாட்டுச் சூழலிலும் திருமதி றெஜினி சத்தியகுமார் அவர்களிடம் பயின்று வரும் மூன்று மாணவர் களிடம் ஒரே கேள்வியினைக் கேட்டேன், அவர்கள் எல்லோருமே அற்புதமாகப் பதிலளித்தனர். அவர்களிடம் கேட்ட கேள்வி:

**பரதம் எதற்காகக் கற்கின்றீர்கள்?**




**செல்வன் நிமலன் சத்தியகுமார்**

முதலில் செல்வன் நிமலன் சத்தியகுமார், (திருமதி றெஜினி சத்தியகுமாரின் மகன்), அவரிடம் கேட்டேன்.

இவர் பதினைந்து வருடங்களாக இக்கலையைக் கற்று வருகின்றார். இக்கலையைக் கற்பதற்கு முக்கியக் காரணம் எங்கள் கலாச்சாரத்தை புலம்பெயர் நாட்டில் வளர்ப்பதற்கும் மற்றும் ஆண்களும் இக்கலையைப் பயிலவேண்டும் என்பதற்காகவே. உடல் நலத்திற்கு மிகவும் நல்லதொரு பயிற்சி என்றும் கூறினார். இக்கலை பொழுது போக்குக்குப் பயிலும் கலை மட்டு மில்லாமல், ஒரு தெய்வீகக் கலையாக நான் இதனைக் கருதுகின்றேன். ஆடும்போது நான் வேறு ஓர் உலகத்திற்குச் சென்று கடவுளோடு பேசுவது போல் தோன்றும் என்றார்.

உள்ளத்திற்கு மகிழ்ச் சியைக் கொடுக்கும் கலையே பரதக்கலை. மகிழ்ச்சி மட்டுமின்றி ஒழுக்கத்தையும் கொடுக்கும் கலையே!




**செல்வி நிஷா சிவகுலேந்திரன்**

அடுத்ததாக செல்வி நிஷா சிவகுலேந்திரன் அவர்களிடம் கேட்டேன், இவர் இருபத்தொரு வருடங்களாக நடனம் பயின்று வருகின்றார். தனது பெற்றோர் தன்னை ஐந்து வயதிலேயே நடனம் பயிலக் கொண்டு சென்றார்கள் என்றார்.

பயிலும் போது மிகவும் விருப்புடன் நடனம் ஆடிவரு கின்றேன்.

இக்கலையில் கிடைக்கும் சந்தோசம் வேறொரு கலையிலும் கிடைப்பதில்லை! முக பாவங்கள் செய்யும்போது ஏற்படும் உள மகிழ்வுக்கு வார்த்தைகளே இல்லை. அகமும் முகமும் மலரும் இப் பரதத்தால் என்றார்.

அரங்கேற்றம் செய்தது ஓர் ஆரம்பம் என்று கருதி தனது கலையினைத் தொடர்ந்து கற்று வருவேன் என்று சொன்னார்.

**திருமதி தர்சிகா சுதர்ஷன்**

இவருக்குப் பின் திருமதி தர்சிகா சுதர்ஷன் அவர்களிடம் கேட்டேன்.

கற்க தொடங்கிய கலையினை ஒழுங்கான முறையில் கற்று, நிறைவு செய்ய வேண்டும் என்பதே. புலம்பெயர் நாடுகளில் பரதக்கலையை வளர்த்து, அடுத்த சந்ததியினருக்குக் கொடுக்கும் ஆர்வத்துடன் பயின்று வருகின்றேன், என்றார். தனது மகளும் அவர் பயிலும் ஆசிரியையிடம் கற்று வருகின்றார்.திருமதி தர்சிகா சுதர்ஷன் அவர்கள் திருமணம் ஆன பின் இக் கலையை நிறுத்தாமல் தொடர்ந்து கற்பதைப் பார்க்கும் பொழுது மிக்க மகிழ்ச்சியாக இருக்கின்றது. இவர் ஆடுவதைப் பார்த்து நான் ரசித்து இருக்கின்றேன்.

செல்வி நிஷாவும் நானும் சேர்ந்தே இக் கலையைக் கற்று வருகின்றோம். அரங் கேற்ற மானது ஆரம்பம் என்று கூறி எங்கள் அனை வரையும் தொடர்ந்து கற்கத் தூண்டியி ருக்கிறார். செல்வன் நிமலனைப் பார்க்கும்பொழுது எனக்கு ஆச்சரியம் தான். நான் பயிலும்பொழுது இவர் கைக்குழந்தை. இவர் பரதம் கற்க ஆரம்பித்து, அரங்கேற்றம் கண்டு பரதக்கலையினை வளர்த்து வருகின்றார். இவரது வளர்ச்சியினை நான் பார்த்து வருகின்றேன். இவர்கள் மூவரும் பெற்றோர்களின் விருப்புடன் பரதக்கலையைக் கற்க வந்து, ஒழுங்காகக் கற்று, அடுத்த சந்ததியினருக்கும் கொடுக்கும் தூய பண்பைச் செய்ய முன் வந்திருக்கிறார்கள்.

யாவரும் தமக்குப் பிடித்த நம் கலைகளைப் பயின்று, தமிழ் மொழியையும், எங்கள் கலாச் சாரத்தையும் அழியாது பாதுகாத்தல் வேண்டும்.







**வெள்ளி விழா கண்ட அவுஸ்திரேலிய சிட்னி தமிழ் அறிவகம் (நூலகம்)**

அவுஸ்திரேலியாவில் பெருமளவிலான தமிழர்கள் வாழ்ந்து வரும் நியூசவுத்வேல்ஸ் மாநிலத்தில் தமிழர்களின் வாசிப்புத் தேடலை பூர்த்தி செய்து வரும் சிட்னி தமிழ் அறிவகத்தின் வருடாந்த கலாச்சார நிகழ்வான “வசந்த மாலை - 2016“ வெள்ளி விழா நிகழ்வாக நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வு சுலனந இல் உள்ள Civic Centre மண்டபத்தில் கடந்த மாதம் ஞாயிற்றுக்கிழமை (08.05.2016) மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.



# எனக்கு ஒரு உண்மை தெரிஞ்சாகணும்!



முதல் மரியாதை படத்தில் ஒரு கொலையாளியின் சாட்சியாக ஒரு பெருவிரல் கிடைத்தது. அதைவைத்துக் கொண்டு பெரியவர் மனம் குமுறும்போது எல்லாம் ஒரு உண்மை தெரிந்தாகணும் என்று சொல்லிபடியே இருப்பார்.

இப்போ தமிழ்நாட்டு தேர்தல். பல இலவசங்கள். மக்கள் இப்போ இலவசங்களைவிட நேரடியாக நோட்டையே தருங்களேன் என்று கேட்டுப்பெறும் காலம்.
அதனால் பணமாகவே வாக்களர்களுக்கு அளிக்கொடுக்கிறார்கள் வேட்பாளர்கள். 15.05. 2016,சென்னை: திருப்பூர் அருகே 570 கோடி ரூபாய் மூன்று கன்டெய்னர்களில் கொண்டு போனது பிடிபட்டுள்ளது.
இது இது வரை பிடிபட்ட பணத்தில் ஒரு பகுதியே. போகிற போக்கை கவனித்தால், வாக்குள் எண்ணும் இயந்திரத்தை விட பணம் எண்ணும் இயந்திரம்தான் அதிகமாகத் தேவை போல் உள்ளது.




சரி எந்தக்கட்சி பணம் கொடுத்தது என்பது இப்போ முக்கியமல்ல. இவ்வளவு பணம் சம்பாதிக்க ஒரு தொகுதி எம்பியால் எப்படி முடியும். **அப்படி என்றால் ஒரு உண்மை தெரிஞ்சாகணும்!.**

**தேர்தல் என்ற பிரமாண்டமான படத்தின் படப்பிடிப்பு யாவும் முடிவடைந்து படமும் வெற்றிகரமாக ஓடுகிறது.சில படுத்துவிட்டன! சில போட்ட முதலையும் இழந்துவிட்டன! இனி அடுத்த படப்பிடிப்பு 2021 ம் ஆண்டு வரை ஒத்திவைக்கப் பட்டுள்ளது!**





## நல்லசெய்தி கெட்டசெய்தி

ஒரு செல்வந்தர் ஒரு ஓவியரின் படங்களால் கவரப்பட்டு அவற்றை விற்றுக் கொடுப்பதற்கு வசதியாக ஒரு கண்காட்சி ஏற்பாடு செய்தார் இரண்டு நாள் கழித்து அந்த ஓவியர் அவரிடம் வந்து தன ஓவியங்கள் ஏதேனும் விற்றனவா எனக் கேட்டார்.அதற்கு அந்த செல்வந்தர்,““உங்களுக்கு இரண்டு செய்திகள் வைத்துள்ளேன்.ஒன்று நல்ல செய்தி இன்னொன்று கெட்டசெய்தி.““என்றார்.ஓவியர் முதலில் நல்ல செய்தியைக் கூறச் சொன்னார்.செல்வந்தரும்,,““நேற்று ஒருவர் வந்து உங்கள் ஓவியங்கள் நீங்கள் இறந்தபின் புகழ் பெறுமா எனக் கேட்டார்.ஏன் அவ்வாறு கேட்கிறீர்கள் என்று கேட்டேன்.அதற்கு அவர் அப்படியானால் பின்னால் நல்ல விலைக்குப் போகும் அல்லவா என்றார்..நானும் அவ்வாறு கண்டிப்பாக நடக்கும் என்று சொன்னேன்.உடனே அவர் உங்களுடைய ஓவியங்கள் அனைத்தையும் நல்ல விலைக்கு வாங்கிச் சென்று விட்டார்.இதுதான் நல்ல செய்தி““என்றார்..ஓவியர் அடுத்த் கெட்ட செய்தியைக் கேட்க ,செல்வந்தர் சொன்னார்,““உங்கள் படங்களை வாங்கியது வேறு யாருமில்லை,உங்கள் குடும்ப டாக்டர் தான்.““


### கடவுள் எங்கே?

ஒரு ஆசிரியர் ஒரு மாணவனிடம்,““கடவுள் எங்கே இருக்கிறார்?““என்று கேட்டார்.மாணவன் சொன்னான்,““எங்கள் வீட்டுக் குளியல் அறையில்,““ஆசிரியர் இப்பதிலை சற்றும் எதிர் பார்க்கவில்லை.அவர் அவனிடம் கேட்டார்,““உனக்கு யார் இப்படி சொன்னது?““மாணவனும் உடனே சொன்னான்,““எனக்கு யாரும் சொல்லவில்லை.எனது தந்தைதினமும் குளித்துக் கொண்டிருக்கும்போது,என் தாயார் குளியல் அறைக் கதவின் முன் நின்று கொண்டு,“அடக்கடவுளே,இன்னுமா குளித்து முடிக்கவில்லை?“என்று கூவுவாள்.இதனால் கடவுள் குளியல் அறையில் இருக்கிறார் என்று தெரிந்து கொண்டேன்.““

## சிரிப்பே மருந்து!





# 7 திருமந்திரமும் வாழ்வியலும்

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.

**இறைவனை அறிதல் பிறவிப் பயன் எனக்கூறும் பாடல் எண் 1480**

"தெளிவறி யாதார் சிவனை அறியார்
தெளிவறி யாதார் சீவனும் ஆகார்
தெளிவறி யாதார் சிவம் ஆகமாட்டார்
தெளிவறி யாதார் தீரார் பிறப்பே."

இப்பாடலின் பொருள் "அறியாமை நீங்கி மனத்தெளிவு பெறாதவர் சிவப் பரம் பொருள் உண்மையை உணர மாட்டார்கள். பரம் பொருள் உண்மையை உணராதவர்கள் தங்களையும் உணரமாட்டார்கள். தங்களை உணராததி தாங்கள் பிறவி எடுத்ததன் பயனை அறியாத அவர்கள் நல்ல ஆன்மாக்கள் ஆகமாட்டார்கள். நல்ல ஆன்மாக்கள் ஆகாதவர் சிவமாகவும் மாட்டார். இப்படித் தெளிவின்றி மயங்கிக் கிடக்கும் இவர்கள் மீண்டும்இ மீண்டும் பிறந்திருக்கின்ற துயரப் பிறவித் தொடர்பினின்று விடுபடவும்மாட்டார்" என்பதாகும்.



**தீதும் நன்றும் பிறர் தர வாரா**

ஒருவனுக்குப் பகையும், நட்பும் அவன் தானாகவே தேட்டிக்கொண்டவை.

திரை விலகினால் தெரிசனம் கிடைக்கும் அதாவது பஞ்சபூதங்கள் (நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்) உலகத்தை மறைத்து நிற்கின்றது எனக் கூறும் பாடல் எண் 2290

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே."

இப்பாடலின் பொருள் "மரத்தினால் செய்யப்பட்ட யானையைப் பார்க்கும் போது யானை தெரியுமே அன்றி அது செய்யப்பட்ட மரம் தெரிவதில்லை. யானையைப் பார்க்கும் உணர்வு உண்டாகிறதே அன்றி அது செய்யக் காரணமான மரம் பற்றிய நினைவு மனதில் எழுவதில்லை. மரம் யானையில் மறைந்து நிற்கிறது. ஆனால் அது மரம் என்று உணர்ந்து அதன் வகைகளை எண்ண முற்படும் போது யானை மறந்து போய் மரமே மனதில் நிற்கிறது. இப்போ யானை மரத்தில் மறைந்து நிற்கிறது. இது போலவே இந்த உலகையும் இதில் இயங்கும் ஐம்பெரும் பூதங்களையும் கண்டு அதில் லயித்திருக்கும் ஆன்மாக்களின் அறிவில் இவற்றை எல்லாம் இயக்கி அருளும் பரம் பொருளைப் பற்றிய எண்ணம் உண்டாவதில்லை. ஆனால் பரம்பொருளின் நினைவு ஆன்மாக்களின் மனதைப் பற்றி விட்டால் அந்தப் பரநினைவில் பார்முதல் பூதம் (உலகத்திலுள்ள நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும் ஐந்தும்) மறைந்து போகும்." என்பதாகும்.

உள்ளத்துள்ளே உள்ளது பரம்பொருள் எனக் கூறும் பாடல் எண் 2550

"காயக் குழப்பனைக் காய நன்னாடனைக்
காயத்தின் உள்ளே கமழ்கின்ற நந்தியைத்
தேயத்துஉள்ளே எங்கும் தேடித் திரிபவர்
காயத்துள் நின்ற கருத்து அறியாரே."

இப்பாடலின் பொருள் "சீவர்கள் உடம்போடு பொருந்தி அவர்கள் உயிரில் நுண்ணுயிராய்க் கலந்து இருப்பவனை, ஆருயிர்களின் உடம்பையே தான் அருளாட்சி செய்யும் திருநாடாகக் கொண்டு திகழ்பவனை, உடம்புக்குள்ளே ஒளிவடிவாய்த் திகழ்பவனை, பாவம் இந்தப் பேதை மக்கள் எங்கெங்கோ தேடித் திரிகிறார்களே! இவர்கள் அப்பெருமான் இவர்கள் உடம்புக்குள்ளேயே இருக்கின்ற உண்மை அறியாதவர்கள்." என்பதாகும். எமது வினை நீங்கிச் சிவகதி அடையும் வழியைக் கூறும் பாடல் எண் 2716 இல்

"சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவார்
சிவசிவ என்னச் சிவகதி தானே."

இப்பாடலின் பொருள் "சிவ சிவ என்று சிவனின் திருப் பெயரைச் சொல்லாதவர்கள் பாவிகள். சிவ சிவ என்று சொல்லத் தீவினை (பாவங்கள்) அழியும். சிவ சிவ என்று செபித்துத் தியானிப்பவர் தேவ உடல் பெறுவர். சிவ சிவ என்று சொன்னால் சிவப் பேறு கிட்டும்." என்பதாகும்.
சரியை, கிரியை, யோகம், ஞானத்தால் இறைவனை அடையலாம் எனக் கூறும் பாடல் எண் 1455

"பத்தன் கிரியை சரியை பயில்வுற்றுச்
சுத்த அருளால் துரிசற்ற யோகத்தில்
உய்த்த நெறிஉற்று உணர்கின்ற ஞானத்தால்
சித்தம் குரு அருளால் சிவம் ஆகுமே."

இப்பாடலின் பொருள் "கிரியை வழியையும் சரியை முறைகளையும் பயின்று, அதன்படி நடந்து, தூயதான இறைவன் திருவருள் துணையால் குறைவற்ற தவயோகத்தில் ஈடுபட்டு அதன் பயனாகப் பெறுகின்ற தவஞானத்தால் மனம் ஆசிரியர் துணையால் சிவமயமாகும்." என்பதாகும். நீயே உனக்குத் தலைவன், தீதும் நன்றும் பிறர் தர வாரா என்பவற்றை கூறும் பாடல் எண் 2228

"தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இன்மையும்
தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனும் ஆமே."

இப்பாடலின் பொருள் "ஒருவனுக்குப் பகையும், நட்பும் அவன் தானாகவே தேட்டிக்கொண்டவை. இப்பிறப்பிலும், எனிவரும் பிறப்பிலும் அவன் அடைய உள்ள இன்ப, துன்ப நிகழ்ச்சிகளுக்கு வேறு யாரும் காரணமில்லை. அவனே காரணம். இப்பிறவியில் அவன் செய்யும் நன்மை இப்போது மகிழ்ச்சியையும், இனிவரும் பிறப்பில் இன்பத்தையும் தரும். இதைப் போலவே அவன் செய்த பாவ வினைகளின் பயனை அவன்தான் அனுபவித்துத் தீர்க்கவேண்டுமே தவிர வேறு யாரையும் துணைக்கு அழைக்கமுடியாது. இந்த உண்மைகளை உணர்ந்து ஒருவன் வாழ முற்பட்டால் அவனுக்குத் தலைவன் அவனேதான். அவனை வேறு யாரும் தலைமை கொள்ள இயலாது." என்பதாகும். இக் கருத்திற்கு பொருத்தமாக கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கணித மேதையும், சங்க காலப் புலவருமான கணியன் பூங்குன்றனார் புறநானூற்றில் 192 ஆம் பாடலில் தீதும் நன்றும் பிறர் தர வாரா எனக் கூறியுள்ளார்.


தமிழ் -யேர்மன்
Nietharshan Magendiran
Vereidigter Dolmetscher und übersetzer
Tamil-Deutsch
Möbil: + 49 176 311 328 73
Email: nietharshan.magendiran@gmail.com

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!





# நெஞ்சத்து அகம் நக

திருவள்ளுவர் நட்பு என்பது கண்ட இடத்தில் மாத்திரம் முகத்தை மலரவைப்பது அல்ல.
அது அன்பாலே முகம் மாத்திரமல்லாமல் அகமும் மலர நட்பதே ஆகும் என்பர். முகம் மலர்வதை நாம் காணமுடியும். அகம் அல்லது உள்ளம் மலர்வதை நாம் எப்படிக் காணலாம்? அல்லது உணரலாம்? இப்படியான ஒரு சிக்கலுக்கு திருவள்ளுவர் ஏற்கெனவே ஒரு நல்ல மறுமொழி சொல்லியிருக்கிறார்.

அன்பு என்பதை ஆட்டைக் காட்டுவது போலவோ மாட்டைக் காட்டுவது போலவோ காட்டமுடியுமா என்றால் 'முடியும்' என்கிறார் வள்ளுவர்.

அன்புக்கும் துன்புக்கும் அடையாளம் அல்லது சான்று கண்ணீர்தான் என்பதை,

**“அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்**
**புன்கண்நீர் பூசல் தரும்” (71)**

என்னும் குறளாலே கூறியுள்ளார். எனினும்

**“முகம்நக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகம்நக நட்பது நட்பு” (788)**

என்பதில் அகம் நகுவதை நாம் எப்படி உணரலாம்? உள்ளமாகிய தாமரைப் பூ இறைவனுக்காக மலருமாம். . அவ்வாறு மலருவதைக் கூப்பிய கைகள் வெளிப்படுத்தும். நாட்ட விழிகள் மேலும் அதனை வெளிப்படுத்தும். இது சுவாமி விபுலாநந்தர் சொன்ன விளக்கம். உள்ளத்தைத் தாமரைப் பூவாக எண்ணுவது கீழைத்தேசப் பண்பாட்டுக் கூறாகும். அப்படியாயின் அகம்நக என்றால் சிரிக்கும் தாமரைப்பூ எனக் கூறலாம்.

நட்புடன் தாமரைப்பூவினைத் தொடர்புபடுத்தி காளிதாசன் என்னும் வடமொழிப் புலவன் மேகதூதம் என்னும் இலக்கியத்திலே “இதழ் விரியும் தாமரைப்பூவினுள் தேனும் மகரந்தமும் சேர்ந்த பாணி” என்று கூற வந்தவன் அப் பாணியினை “மைத்திரி க‘ாய” என்று சொல்கிறான்.

“நட்புப் பாணி” என்று பொருள். இந்த நட்புப் பாணி இனிப்பைத் தரும். புதிய உயிர்ப்பைத் தரும். அழகான சூழலைத் தரும். எனவே, சிரிக்கும் உள்ளமாகிய தாமரைப்பூ நட்புப் பாணியுடன் அமையின் எவ்வளவு நல்லாயிருக்கும்!






# புலம்பெயர்ந்த தமிழர்களை எச்சரிக்கும் யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன்



அதாவது வெளிநாட்டில் வாழும் நீங்கள் உங்கள் உறவுகளுக்காக பணத்தை அனுப்புகிறீர்கள் கேட்கும் பொருட்களை வாங்கி கொடுக்கின்றீர்கள்.அவரகளும் நல்ல தூக்கம் நல்ல சாப்பாடு எந்த கஸ்ரமும் உணராதவர்களாய் வாழ்கின்றனர்...

இவர்களின் எதிர்காலம் உங்களால்தான் அழிக்கப்படுகின்றது என்பது உங்களுக்கு தெரியுமா?
வேலை தேடாமல் சோம்பேறிகளாக வாழ்வது உங்களுக்கு தெரியுமா?
ரவுடிதனம் பண்றது வீதியில் உங்களுக்கு தெரியுமா ??

சிறுவயதில் போதைக்கு அடிமையாகுவது உங்களுக்கு தெரியுமா?
இதெற்கெல்லாம் காரணம் நீங்கள் அனுப்பும் பணம்தான்..! அவர்கள் என்ன செய்கின்றனர் என்று உங்களால் கண்காணிக்க முடியுமா???

நம் சமுதாயம் சீர்கெடாமல் இருக்க வேண்டுமானால் வளர்ந்துவரும் இளைஞர் யுவதிகள்தான் வழி நடத்த வேண்டியவர்கள். அவர்களே சமுகத்தை சீர்கெடுத்தால் எப்படி?
நாமும் ஒரு காரணமாக இருக்க கூடாது..!




# பழமொழிகளில் பண்பாடு




(முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்)

## அடியாத மாடு படியாது!

இது என்ன தலைப்பு என்று எல்லோரும் எண்ணக்கூடும். நமது முன்னோர்களின் நினைவிலே இத்தொடர் ஆழமாகப் பதிந்திருந்தது. குறிப்பாகப் பெற்றோர்களின் செயற்பாட்டை நெறிப்படுத்தும் ஒரு பழமொழியாக இன்று வரை நிலவும் தொடர் என்றால் மிகையாகாது. விலங்கு பற்றிய செய்தியாக விளங்கும் இத்தொடர் எப்படி மனிதனை நெறிப்படுத்தும்? என்ற கேள்வியும் இப்போது எழக்கூடும். தமிழரது பண்டைய வாழ்வியல் தந்த பட்டறிவினை பதிவாகவே இப்பழமொழி விளங்குகிறது.

மனிதன் நாடோடியாக அலைந்து திரிந்த வாழ்வியலின் வளர்ச்சி நிலையாக ஆற்றோரங்களிலே தங்கி வாழ்வு நடத்த முற்பட்டபோது சில விலங்குகளையும் தனக்குத் துணையாக்கிக் கொண்டான்.

அந்த வகையில் பயிர்ச் செய்கையை அவன் மேற்கொண்ட போது மாடு அவனுக்குப் பெரிதும் உதவியது. வாய்மொழி இலக்கியமாகத் தோன்றிய சங்க இலக்கியங்களிலே மாடு 'ஆநிரை' என அழைக்கப்பட்டதை அறிய முடிகிறது. 'ஆ' என்பது பசுவைக்குறித்தது காடும் காடு சார்ந்த பிரதேசமுமான முல்லை நிலத்தவருடைய தொழிலாக "ஆநிரை மேய்த்தலே" விளங்கியது. வயலும் வயல் சார்ந்த பிரதேசமுமான மருதநிலத்திலே உழவுத் தொழிலுக்கு உதவும் விலங்காக எருமை விளங்கியது. நீர் வளத்தையும் பசும்புல்லையும் விரும்பி வாழும் எருமையினம் மருதநிலத்து மக்களுக்குப் பெருஞ் செல்வமாகவும் பாற்பயன்தரும் பெருமையுடையதாகவும் விளங்கியது. பெருவலிமையும் கடும் உழைப்புத்திறனும் கொண்ட எருமைகள் உழவர்களால் இன்றும் பேணப்பட்டு வருகின்றன. எருமையின் செயற்பாடுகளை மனிதர்களின் செயற்பாடுகளோடு ஒப்பிட்டுப் பண்டைய புலவர்கள் பாடியுள்ளனர். ஐங்குநூறு என்னும் சங்கத் தொகுப்பு நூலிலே "எருமைப்பத்து" எனப் பத்துப்பாடல்கள் இவ்வாறு பாடப்பட்டுள்ளன.
ஊர் பற்றிப் பாடும் புலவர் வருமாறு எருமை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

**"மள்ளர் அன்ன தடம் கோட்டு எருமை**
**மகளிர் அன்ன துணையொடு வதியும்**
**நிழல் முதிர் இலஞ்சிப் பழனத்ததுவே**
**கழனித் தாமரை மலரும்**
**கவின் பெறு சுடர் நுதல் தந்தை ஊரே"**

(ஐங்குறுநூறு : 94)

மிக்க அழகுடைய ஒளி வீசுகின்ற முன் நெற்றியை உடையவளுடைய தந்தையின் ஊரில் தாமரை நிறைய மலர்ந்திருக்கும். வீரர்களைப் போலப் பெரிய கொம்புகளையுடைய ஆண் எருமைகள் வீரர்களுடைய காதலிமாரைப் போன்ற தம் பெண் எருமைகளோடு நிழல் நிறைந்த நீர் நிலைகளையுடைய வயற்பிரதேசத்திலே தங்கியிருக்கும்.
இந்த ஆண் எருமைகளை உழவுக்குப் பயன்படுத்தும் போது அவற்றை அதிலே பயிற்றுவதற்குத் தடி கொண்டு அடிக்கும் வழக்கம் இருந்துள்ளது. இயற்கையான நிலையில் கிடைக்கும் புல்லை மேய்ந்து இன்பமாக வாழ்ந்த எருமை மனிதனின் உழவுத் தொழிலுக்கு உதவியாளாக நேர்ந்த போது அவனுடைய சொற்படி வாழ நேரிட்டது. அதுமட்டுமன்றி அவனுடைய செல்வமாகவும் கருதப்பட்டது. அந்த வகையிலே அவனோடு அருகில் வாழ்ந்த எருமை மாடு எனப் பெயர் பெற்றது. இச் சொல்லின் பயன்பாட்டைத் திருக்குறள் பதிவு செய்துள்ளது.

"கேடு இல் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை" (குறள் :400)

ஒருவனுக்கு அழிவு இல்லாத சீரிய செல்வமாவது கல்வியாகும். அது ஒழிந்த மணி, பொன் முதலானவை செல்வமல்ல. இங்கு மாடு என்ற சொல்லை வள்ளுவர் 'செல்வம்' என்ற பொருளிலே பயன்படுத்தியுள்ளார். மனிதனுடைய உழவுத் தொழிலுக்கும் உணவுப் பொருளாகிய பாலுக்கும் எருமை பயன்பட்ட போது அது பெருஞ் செல்வமாகக் கருதப்பட்டது. 'ஆநிரை' என்ற சொல் பசுக்கூட்டத்தைக் குறிப்பது. ஆனால் பசு என்பது வடமொழிச்சொல்லாகும். இன்று ஆநிரை என்ற சொல் 'பசுக்கூட்டம்' என வழங்கப்படுகிறது.

ஆனால் 'மாடு' என்ற சொல் விலங்கு என்னும் பொருளில் பழமொழியிலே பயன்படுத்தப்பட்டுள்ளது.
இந்தப் பயன்பாடு எருமையின் உழவுப் பயன்பாட்டிலிருந்தே தொடர்ந்திருக்க வேண்டும். ஒரு பயிற்சியை மேற்கொள்ளும் போது அதை நெறிப்படுத்த தடியைப் பயன்படுத்தும் வழக்கம் ஏற்கனவே இருந்துள்ளது. இந்தப் பயிற்றும் நிலை மனிதவாழ்வியலிலும் வந்து சேர்ந்துள்ளது. கல்வி கற்பிக்கின்றபோது தடி கொண்டு அடித்துப் பயிற்றும் நிலை இருந்துள்ளது. ஆசிரியர் என்றாலே கையிலே பிரம்புடன் இருப்பவர் என்ற ஒரு கற்பனை உருவம் எல்லோர் மனதிலும் படிந்துள்ளது. ஒரு மாணவன் தவறுசெய்யும் போது அவனைத் தண்டிப்பதற்குப் பிரம்படி கொடுக்கும் வழக்கம் இற்றைவரையும் தொடர்கிறது. "அடியாத மாடு படியாது" என்ற முதுமொழி உழவுத் தொழிலில் மாட்டைப் படியவைப்பதற்கு அதற்கு தடியால் அடிக்கும் வழக்கம் இருந்ததை நன்கு உணர்த்துகிறது. யானையைப் பயிற்ற அங்குசமும் குதிரைக்குச் சவுக்கடியும் போல மாட்டுக்குத் தடியைப் பயன்படுத்தினர்.





விலங்கின் இயற்கையான வாழ்வியல் புல்மேய்ந்து நீர் அருந்தி மகிழ்வானதாக இருந்தது. மனிதன் விலங்கை தன்னுடைய முயற்சிக்குப் பயன்படுத்தத் தொடங்கிய போது விலங்கின் இயற்கையான வாழ்வியலில் மாற்றம் ஏற்பட்டது. வயலிலே நிலத்தை உழுவதற்கு ஏரிலே மாடுகளைப் பூட்டிப் பயிற்றல் நடைபெற்றது. மேலும் பயிர்ச்செய்கைப் பயன்களை ஏற்றிச் செல்லும் வண்டிகளை இழுப்பதற்கும் மாடுகள் பயன்படுத்தப்பட்டன. இந்தப் பயிற்றலிலே மாடுகளை நெறிப்படுத்தச் சில வேளைகளில் அடிக்கவும் நேர்ந்தது. அடிப்பதன் மூலம் மாடுகளைப் படிய வைக்க முடிந்தது. மாடுகளும் அந்தப் பயிற்றல் மூலம் உழவு வேலை, வண்டி இழுக்கும் வேலை என்பவற்றைத் திறமையாகவே செய்தன. நெற்கதிர்களிலிருந்து நெல்மணிகளைப் பிரிப்பதை "சூடுமிதித்தல்" என அழைத்தனர். அந்த வேலைக்கும் மாடுகளே பயன்படுத்தப்பட்டன. இது இன்றுவரையும் தொடர்கிறது.

"மாடு கட்டிப் போரடித்தால்
மாளாது செந்நெல் என்று
ஆனை கட்டிப் போரடிக்கும்
அழகான தென் மதுரை"

என்ற நாட்டார் பாடலிலும் இச் செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே மாடு மனிதனுடைய செல்வத்தைப் பெருக்கும் ஒரு விலங்காக இருந்தமையால் மனிதனுடைய ஏனைய முயற்சிகளோடும் ஒப்பிட்டுப் பேசும் விலங்காகவே விளங்குகிறது. விளைபொருளோடு தொடர்புற்றிருந்த மாடு பின்னர் கல்வி முயற்சியிலும் தொடர்புறுத்தப்பட்டது. அந்நிலையில் "படியாது" என்ற சொல் படிப்பைத் தொடராது என்ற பொருளில் வழங்கப்பட்டது. "படிதல்" என்பது கட்டளைக்கு ஏற்ப நடத்தல் என்ற பொருளில் மாட்டின் செயற்பாடாக அமைந்திருக்கும். பின்னர் "படியாது" என்ற சொல் "பாடம் படித்தல்" என்ற செயற்பாட்டில் மனிதனோடு ஒப்பிட்டுப் பேசப்பட்டது.

தொடர்ச்சி 30ம் பக்கம்

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர்: நடராஜா சுதன்
Tel: 069 25 62 63 53
மாதம் மாதம் மாதரைக்கவரும்
புத்தம் புது டிசைன்களில்
தங்க நகைகள்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்
பயணங்களை இனிமையாக்கும்
குறைந்தவிலையில்
பயணச்சீட்டுக்கள்
மற்றும் இலத்திற்குத்
தேவையான மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்
Kaiserstr.64 (ladan Nr.22) 60329 Frankfurt/Main






நகைச்சுவை மட்டுமில்லை குணச்சித்திரமும் வரும் என்பதை சர்வர் சுந்தரம் போன்ற படங்களில் நிரூபித்தவர்.
நாகேஷுக்கு மத்திய அரசின் தேசிய விருது வழங்கப்பட்டதில்லை. நம்மவர் படத்திற்காக வழங்கப்பட்ட உதிரி விருது நாகேஷின் திறமைக்கு முன்னால் ஒன்றுமேயில்லை.
மலையாளத்தில் நகைச்சுவை வேடங்களில் நடித்து வந்த சலீம்குமார் ஆதாமின்டெ மகன் அபு படத்தில் குணச்சித்திர வேடத்தில் தனது திறமையை நிரூபித்ததும், அப்படத்திற்காக அவருக்கு தேசிய விருது அளித்தனர். இவர்களுக்கு கிடைத்த அங்கீகாரம் நாகேஷுக்கு வழங்கப்படவில்லை.

அதேபோல் எம்.ஜி.ஆர்., சிவாஜி என்ற இருபெரும் நடிகர்களின் படங்கள் வெற்றி பெற்றதில் நாகேஷின் பங்களிப்பு நிறைய உண்டு. அன்று சிவாஜி படத்தில் ஒரு நடிகை நடித்தால் அவரை எம்.ஜி.ஆர். தனது படத்தில் நடிக்க வைக்க தயங்குவார். எம்.ஜி.ஆருக்கு ஒருவர் கதை எழுதினால் சிவாஜி அவரை விலக்குவார். இப்படி போட்டியும், பொறாமையுமாக இருந்தவர்கள் ஒருவர் விஷயத்தில் மட்டும் ஈகோ பார்ப்பதில்லை. அவர் நாகேஷ். நாகேஷ் இருந்தால்தான் தங்கள் படங்களுக்கு எக்ஸ்ட்ரா மைலேஜ் கிடைக்கும் என்பதை அவர்கள் இருவரும் அறிந்திருந்தனர். நாகேஷுக்கு உரிய அங்கீகரம் இல்லை என்ற குற்றச்சாட்டு அவர் வாழ்ந்த காலத்திலேயே இருந்தது.

சிட்னியிலிருந்து ஒலிபரப்பப்பட்ட தமிழ் முழக்கம் வானொலிக்கு நாகேஷ் பேட்டியளித்த போது, இந்த கேள்வி முன்வைக்கப்பட்டது. அதற்கு நாகேஷ் அளித்த பதில் அவரது முதிர்ச்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டு.





வானொலி-நியாயமாக உங்களுக்கு வரவேண்டிய நல்ல பெயர் மற்றவர்களுக்குச் செல்லும் போது உங்களுக்கு எப்படி இருக்கும்?
நாகேஷ் - நான் கவலையே படமாட்டேன் சார். ஒரு கட்டடம் கட்டும் போது, சவுக்கு மரத்தை முக்கியமா வச்சு சாரம் கட்டி, குறுக்குப் பலகைகள் போட்டு, அதன் மேல பல சித்தாள்கள் நின்னு, கைக்குக் கை கல் மாறி கட்டடம் உயர்ந்து கொண்டே போய் பல ஆண்டுகளுக்குப் பிறகு அது முடிந்த பிறகு, அந்தக் கட்டிடத்துக்கு வர்ண ஜால வித்தைகள் எல்லாம் அடிச்சு, கீழ இறங்கும் போது ஒவ்வொரு சவுக்கு மரமாக அவிழ்த்துக் கொண்டே வருவார்கள். கட்டடம் முடிந்து கிரகப் பிரவேசத்தன்று எந்தக் கட்டடம் கட்டுவதற்கு முக்கிய காரணமாக இருந்ததோ அந்தச் சவுக்கு மரத்தை யார் கண்ணிலும் படாமல் பின்னால் எங்கயோ மறைத்து வைத்துவிட்டு, வேறெங்கேயோ வளர்ந்த வாழை மரத்தை முன்னால் நட்டு கிரகப் பிரவேசம் நடத்தி அனைவரையும் வரவேற்பார்கள். அத்தனை பெருமையும் வாழை மரத்துக்குப் போய் விடும். இதில் உள்ள உண்மை என்ன தெரியுமா? அந்த வாழை மரம் மூன்று நாள் வாழ்க்கை தான் வாழும். ஆடுமாடுகள் மேயும். குழந்தைகள் பிய்த்தெடுப்பார்கள். பிறகு குப்பை வண்டியிலே போய்ச் சேரும். மறைந்து கிடக்கிறதே அந்தச் சவுக்கு மரம் கண்ணீர் விடுவதில்லை. அடுத்த கட்டடம் கட்டுவதற்கு தயார் நிலையில் என்றைக்கும் சிரித்துக் கொண்டேயிருக்கும். அதுதான் நாகேஷ்

## பழமொழிகளில் பண்பாடு

தொடர்ச்சி 29 ம் பக்கம்

எருமையும் இவ்வாறே மனிதனோடு ஒப்பிட்டுப் பேசும் விலங்காக உள்ளது. ஒருவரை ஏசும் போது அவரை “நீ ஒரு எருமை” எனக் கடிந்துரைக்கும் வழக்கம் இன்றும் உள்ளது. பேச்சு வழக்கில் “எருமை மாடு” என்ற தொடரும் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் உழவர் தமக்குப் பயிர்ச் செய்கைக்கு உதவிய மாட்டிற்கு நன்றி கூறுமுகமாகத் தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் “மாட்டுப் பொங்கல்” நடைமுறையைச் செய்யும் வழக்கம் இன்றும் உள்ளது. “மாடு” என்ற சொல் மூன்று பொருளிலே தற்போது பயன்படுத்தப்படுகிறது. இடம், பக்கம், செல்வம் என முப்பொருள் கொண்ட சொல்லாகத் தமிழ்ப் பேரகராதி விளக்கம் தந்துள்ளது. எனினும் இன்று தமிழ் நாட்டிலே வழக்கிலுள்ள “மாட்டுப் பெண்” என்ற சொல்லையும் நோக்க வேண்டியுள்ளது. “சீதனம்” என்னும் செல்வத்தைக் கொண்டுவரும் மருமகள் “மாட்டுப் பெண்” என அழைக்கப்பட்டாள். பாரதியின் “பெண் விடுதலைக் கும்மி” என்னும் பாடலில் மாடு பெண்ணின் வாழ்வியலோடு இணைந்து இருக்கும் நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாட்டை அடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டில் எம்மிடம் காட்ட வந்தார் அதை
வெட்டிவிட்டோமென்று கும்மியடி (பாடல் : 3)

பெண்ணையும் மாட்டையும் ஒரு நிலையிலே வைத்து நடத்திய ஒரு நிலையிருந்ததை இதன் மூலம் அறிய முடிகிறது. எனவே “அடியாத மாடு படியாது” என்ற பழமொழி பெண்களின் வாழ்க்கையையும் எடுத்துரைக்கும் பணியையும் செய்திருக்கிறது எனலாம். மேலும் பழமொழிகளை நுண்ணாய்வு செய்ய வேண்டியதையும் இந்நிலை உணர்த்தி நிற்கிறது.






# தாய்மை என்பது
# குழந்தை பெற்றால் தான் என்பதல்ல!




ஒரு காலத்தில் வசனங்களுக்காகவே படங்கள் ஓடின. பின்னர் பாடல்களுக்காக. தற்போது எதற்காக என்று சொல்லமுடியாமல் உள்ளது. ஆனால் சூர்யாவின் 24 படம் மீண்டும் வசனங்களுக்காக என்று எண்ணும் அளவிற்கு வந்துள்ளது. படத்தில் வரும் முத்தான வசனங்களைப் பாருங்கள்.

**தாய்மை!**
தாய்மை என்பது குழந்தை பெற்றால் தான் என்பதல்ல, ஒருவர் மீது நீங்கள் முழுமையாக அன்பு செலுத்தி, அவர்களது வாழ்க்கைக்காக உங்களை முழுமையாக அர்ப்பணிக்கும் போதும் நீங்கள் தாய்மையை உணர முடியும்.

**நாவினால் சுட்ட புண்**
ஒருவரை ஓங்கி அடித்துவிட்டால் கூட அந்த காயம் அல்லது மன சங்கடம் ஓரிரு நாட்களில் ஆறிவிடும். ஆனால், நாவினால் தகாத வார்த்தைகளில் பேசுவது வாழ்நாள் முழுக்க நாம் அவர்களை இழக்கும் நிலைக்கு கொண்டு சேர்த்து விடும்.

**அன்பான குடும்பம்**
இவ்வுலகில் மிகவும் விலை உயர்ந்தது, தங்கமோ, வீடோ, டைம் மெஷினோ அல்ல. அன்பான குடும்பம். உங்களை முழு மனதாக நேசிக்கும் மனிதர்கள். மனித அன்பினை விட விலை உயர்ந்த பொருள் உலகில் வேறேதும் இல்லை.

**எளிமையே இன்பம்**
எளிமையான வாழ்க்கை தான் உங்களுக்கு மிகையான இன்பத்தை தரவல்லது. பணம் அதிகமாக சேர, சேர மனத்திலும், வாழ்விலும் அழுத்தம் அதிகரித்துக் கொண்டே போகும். எனவே, எவ்வளவு உயர்ந்த நிலைக்கு சென்றாலும் எளிமையை மறந்துவிட வேண்டாம்.



**பொறாமை**
நம் உழைப்பை தவிர்த்து, பிறர் உழைப்பை திருட அல்லது அவர்களின் சமூக நிலை குறித்து பொறாமை படுவது. எந்த விதத்திலும் சரியானதல்ல. மேலும், இது உங்கள் நிலையை தான் கீழே கொண்டு செல்லும்

**வினை விதைத்தவன்**
ஒருவருக்கு தீங்கு நினைக்கும் போது ஒன்றை நீங்கள் மனதில் நினைத்துக் கொள்ள வேண்டும். அந்த தீங்கு பல மடங்கு அதிகமாக உங்கள் வாழ்வில் வெகு விரைவில் நடக்கும். அதை தாங்கிக் கொள்ளும் மன தைரியம் உங்களிடம் இருக்க வேண்டும். இது நல்லதுக்கும் பொருந்தும்.

**இனிஷியல்**
அப்பா பெயர் தான் இனிஷியல் போட வேண்டும் என்றில்லை. அன்பையும், உயிரையும் தாய்ப்பாலாக ஊட்டி வளர்க்கும் அன்னையின் பெயரையும் கூட இனிஷியலாக போட்டுக் கொள்ளலாம்.

**வேலையும், குடும்பமும்**
என்ன தான் பெரிய வேலையாக இருந்தாலும். உயர் பதவி, அந்தஸ்து என எதுவாக இருப்பினும். குழந்தைகளுடன் அந்தந்த பருவத்தில் நேரம் செலவழிக்க தவற கூடாது.




காதலுக்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம். காதலிக்காக, நமது அன்புக்குரியவருக்காக நாம் செய்யும் அனைத்தும் ஈடிணையற்ற இன்பத்தை தரவல்லது ஆகும்.




## ஒரு நாட்டின் நல்ல குடிமகனாகவும் சிறந்த குடும்பத் தலைவனாகவும் தல!

சென்னை: நடிகர் அஜீத் தனது மனைவி ஷாலினியுடன் திருவான்மியூரில் உள்ள வாக்குச்சாவடி ஒன்றில் முதல் ஆளாக வாக்களித்துள்ளார். (16.05.2016) தமிழக சட்டசபை தேர்தல் இன்று காலை 7 மணிக்கு துவங்கியது. வாக்குப்பதிவு துவங்க சில நிமிடங்கள் இருக்கையிலேயே சரியாக 6.50 க்கு நடிகர் அஜீத் தனது மனைவி ஷாலினியுடன் திருவான்மியூரில் உள்ள வாக்குச்சாவடி ஒன்றுக்கு வந்தார். வாக்குச்சாவடியில் வரிசையில் நின்று அவர்கள் இருவரும் வாக்களித்தனர்.
முதலில் ஷாலினியும், அடுத்ததாக அஜீத்தும் வாக்களித்தனர். வாக்குப்பதிவு துவங்கியதும் முதல் ஆளாக வாக்களித்துள்ள பிரபலம் அஜீத் என்பது குறிப்பிடத்தக்கது. எப்பொழுது தேர்தல் நடந்தாலும் அஜீத், தனது மனைவியுடன் வாக்குச்சாவடிக்கு வந்து மக்களோடு மக்களாக வரிசையில் நின்று வாக்களிப்பது வழக்கம். இந்த முறையும் தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றியுள்ளார் அஜீத். அஜீத் வாக்களித்துவிட்டு மை வைக்கப்பட்ட விரலை மீடியாக்களுக்கு காண்பித்துவிட்டு கிளம்பினார். எவ்வளவோ மக்கள் ஆரவாரப்பட்டாலும் அமைதியாக தனது மனைவியையும், தாயாரையும், கையைப்பிடித்து அழைத்துச் சென்ற காட்சி தல ஒரு சிறந்த குடும்பத் தலைவன் என்பதை நிரூபித்தது.
முதல்வருக்கும் கலைஞருக்கும் இல்லாத பரபரப்பு, தலைக்கு இருந்தது. ஆனால் தலயிடம் அடக்கம் மிஞ்சி நின்றது. சினிமா வேறு வாழ்வு வேறு, இரண்டையும் மாற்றி, மாற்றி, குழப்பாத குணம் அஜித்தை யாவரும் விரும்பக் காரணமாகவும் உள்ளது.



Hückelhoven நகரில் புதிய இடத்தில் புதுப்பொலிவுடன் ஆசியா சமுத்திரம் Parkhofstraße-101
Asiatischer Super markt
ஆசியா சமுத்திரம்
பசுமையான மரக்கறிகள்– கடல் உணவுப் பொருட்கள் – வீட்டுக்குத்தேவையான மளிகைப்பொருட்கள் அனைத்தும்எம்மிடம் தரமாகவும் மலிவாகவும் கிடைக்கும்.
Vijay tv agent
Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30
VIJAY
R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com
Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan
துரித பணமாற்றுச் சேவை
Ria Money Transfer
MoneyGram International Money Transfer
VALUTRANS




# Rathy Jewellers Ltd

The Leading Jewellery store in London with the largest selections

அதிக தேர்வுடன் கூடிய, லண்டனில் முன்னணியில் திகழும் நகைமாளிகை ரதி!

28 Ealing Rd
Wembley
HAO 4TL London
Tel: 02089033063

எப்பொழுதும்
நியாயவிலை
புத்தம் புதுநகைகள்!

Opening Hours
Mon-Sat 10.00 am to 6.30 pm
Sun 12.00 to 6.30 pm

209 upper Tooting Road
Tooting SW17 7TG
0208682 2233




# Logan Accountants Ltd

மிகக்குறைந்த கட்டணம் மனம் நிறைந்த சேவை

Milton Keynes Business centre,
Suite 120 Foxhunter Drive
Linford wood
Milton Keynes
MK14 6GD
U.K

காதலர்தின வாழ்த்துக்கள் . Feb. 14

jeya@loganltd.co.uk



லண்டனில்
ஒர் அழகிய
கல்யாண மண்டபம்

# NAKSHATRA
## Wedding Hall



The Perfect Venue For Any Occasion With Indoor & Outdoor Facilities



Accommodates up to 600
with complete onsite parking facility for more than 150

600 விருந்தினர்கள் கலந்துகொள்ளவும் 150 மேற்பட்ட வாகனத்தரிப்பிடத்துடன்
அமைந்த அழகிய கல்யாண மண்டபம்



NAKSHATRA
MANGALYAM WEDDING
PACKAGE for 600 guests
Only £30 Per Person
inclusive of Venue,
Decoration, Catering,
Melam, Sounds.

0778 856 0001 .www.nakshatrahall.com
Snakey Lane,Feltham,Middlesex,TW13 7 NA.